தோழர் மகாஜனன்
நாகலிங்கம் சிறிகெங்காதரன்

# மணிவிழா மலர்

2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DON'T SIGN ANYTHING UNLESS YOU SEE THIS SIGN

INDEPENDENT FINANCIAL ADVISER

Only an Independent Financial Adviser
works for you in recommending the best life assurance,
pensions or unit trusts on the market.
To be sure you get the best deal, contact us.

## Rama & Company

Mint Financial Services Ltd

Rama & Company

Rama & Company is an appointed representative of Mint Financial Services Limited
which is authorised and regulated by the Financial Services Authority

3 The Orchard, Wickford, Essex SS12 0HB England

**Tel. (01268) 766 624**
**Mobile. (07956) 369 557**
**Fax. (01268) 561 805**
**Email. rama@mintzone.com**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழர்
மகாஜனன்
சமூகத் தொண்டன்

# தெல்லிப்பழை
# நாகலிங்கம் சிறிகெங்காதரன்
# மணிவிழா மலர்

*2011 மார்ச் 05ம் திகதி இலண்டனில் நடைபெற்ற மணிவிழாவின்போது மணிவிழாக் குழுவினரால் வெளியிடப்பட்டது*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தெல்லிப்பழை

# நாகலிங்கம் சிறிகெங்காதரன்
# மணிவிழா

***மிக நீண்டதானதும் காத்திரமானதுமான அரசியல், கல்வி, சமூக, விளையாட்டுத்துறைப் பங்களிப்புக்களைக் கௌரவிக்கும் வண்ணம் அவருடன் மேற்படி அமைப்புகளில் சேர்ந்து வேலைசெய்த நண்பர்கள் இணைந்த***

## மணிவிழாக் குழு

வ இ இராமநாதன்
*முன்னாள் தலைவர், மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்*

வை தயாளன்
*முன்னாள் தலைவர், மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்*

அ திருக்கேதீஸ்வரன்
*தலைவர், தமிழ்ப்பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம்*

ச மயில்வாகனம்
*முன்னாள் தலைவர், தமிழ்ப்பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம்*

க சற்குணசீலன்
*முன்னாள் பொருளாளர், தமிழ்ப்பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம்*

ந சச்சிதானந்தன்
*முன்னாள் செயலாளர், இலண்டன் சிவன் கோவில், லுயிசம்*

வி சிவலிங்கம்
*நாற்பதாண்டு கால அரசியல் தோழர்*

நா சிவானந்தசோதி
*பதிப்பாளரும் பிரதம ஆசிரியரும், தமிழர் தகவல், இலண்டன்*

செ கணேசலிங்கம்
*செயலாளர், மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்*

சு சிறிகாந்தலிங்கம்
*சட்டத்தரணியும் நீண்டகால நண்பரும்*

வீ தவமுருகநாதன்
*பொருளாளர், மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்*

பொ விக்கினேஸ்வரன்
*கலாச்சார செயலாளர், மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்*

சி அகிலன்
*மகாஜனன், ஊரவர், நண்பர்*

*கி ஜெகதீசன்*
*நீண்டநாள் நண்பர், சகோதரன்*

நா சிறிசபேசன்
*இளைய சகோதரன், எழுத்தாளர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவன் கெங்கா, உற்ற தோழன்

**பொ. கனகசபாபதி.**

எனக்கு அவருடன் ஏறக்குறைய 53 வருடப் பரிச்சயம். முதலில் ஆசிரியராக, பின்னர் தோழராக. பல விடையங்களில் நாம் இருவரும் ஒத்த நோக்குடையவர்களாக இருந்த காரணத்தால் எமது தொடர்பு என்றும் கருத்து முரண்பாடற்றதாக இருந்துள்ளது. அவர் உயர் கல்விக்காக இங்கிலாந்து சென்றதும் எமக்கிடையே உள்ள தொடர்பு சற்றுக் குறையவே செய்தது. ஆனால் நான் மீண்டும் மகாஜனக் கல்லூரி அதிபராக வந்ததும் முன்னிலும் வலுப் பெற்றது. நான் அதிபர் பதவி ஏற்றதும் என்னை வாழ்த்தி வந்த பலகடிதங்களில் முதலில் வந்த சிலவற்றில் அவருடையதும் ஒன்று. பாடசாலையினது வளர்ச்சிக்காக நிறையவே செய்ய வேண்டியிருந்ததை உணர்ந்தேன். மகாஜனாவின் பழைய மாணவர்கள் உலகெலாம் பரந்து வாழ்வதை உணர்ந்த நான் ஆங்காங்கே பழைய மாணவர் சங்கங்களை உருவாக்கினால் என்ன என எண்ணினேன். இங்கிலாந்திலேயே மகாஜனாவின் பெருந்தொகையான மாணவர்கள் இருந்தார்கள்.

மகாஜனாவின் காற்றினைப் பெருமளவில் சுவாசித்தவர் கெங்காதரன். அவர் பெற்றோர், உடன்பிறப்புக்கள் அத்தனையுமே மகாஜனாவினை ஆலயம் என்ற அளவினுக்குப் பூசித்தவர்கள். போசித்தவர்கள். அவர்களது இல்லம் மகாஜனாவின் இரண்டாவது விடுதிச் சாலை போல இயங்கியதுண்டு. இத்தகைய ஒரு சூழல் வேறு எந்த ஒரு பாடசாலைக்கும் வாயத்திருக்க முடியாது என்பது எனது அபிப்பிராயம். மகாஜனாவின் பாரிய எழுச்சிக்கு வாய்த்த பல காரணிகளில் இதுவும் ஒன்றாகவே நான் கருதுவேன்.

ஆகவே நான் முதலில் கெங்காதரனுடன் தான் தொடர்பு கொண்டேன். அவர் மிகவும் சந்தோசமாக சம்மதித்தார் சில ஆக்க வேலைகள் கூட நடந்தன. துரதிஷ்ட வசமாக நான் நைஜீரியா செல்ல வேண்டி வந்தது. ஏழு வருடங்களின் பின்னர் நான் கனடா வந்ததும் அந்த ஆசை மீண்டும் துளிர் விட ஆரம்பித்தது. கனடாவில் ஒன்று ஆரம்பமானது.அதற்கு முன்னரேயே இங்கிலாந்தில் கெங்கதரனும் அவருடன் இணைந்த மகாஜனாவின் மேல் காதலுற்ற சில பழைய மாணவர்களும் இணைந்து பழைய மாணவர் சங்கத்தினை உருவாக்கிவிடனர்.பெரு மகிழ்ச்சியுற்றேன். அதன் செயற்பாடுகள் பற்றி இங்கே நான் குறிப்பிட வேண்டியதில்லை. சந்தர்ப்பம் கிடைக்கின்ற போது நான் அங்கு சென்று அதனுடைய நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளத் தவறியதும் இல்லை. கெங்காதரன் அதனுடைய அத்தனை செயற்பாடுகளிலும் தன்னை இணைத்துத் தீவிர பங்காற்றியவர். பழைய மாணவர் சங்கத்தின் உயிர் நாடி அவர். இப்போ? கெங்காதரன் பற்றி எனது மனதில் தோன்றியவை.

**சற்றும் நெகிழ்ச்சி காட்டாத அரசியல் வாதி:** மாணவராயிருந்த காலம் தொட்டு தீவிரமான அரசியலில் நாட்டம் கொண்டு வாழ்ந்தவர் கெங்காதரன். தெல்லிப்பழை, காங்கேசந்துறை தேர்தல் தொகுதியின் ஒரு கூறு. கெங்காதரன் பிறந்த ஆண்டிலேயே அது தமிழ்க் காங்கிரஸ் தமிழரசுக்கட்சி என தமிழ்த் தேசிய உணர்வுடைய வாக்காளர்களால் நிரம்பிய பகுதி. இங்கு கெங்காதரன் குடும்பம் அன்று முதலே சற்று வித்தியாசமானதாக விளங்கியது. தொழிலாள வர்க்கத்தைச் சார்ந்த அவர்களது குடும்பம் பொதுவுடமைச் சித்தாந்தத்தினைத் தழுவி நின்றது. கெங்காதரனுக்கு அவரது அருமை தாயார் அந்த சித்தாந்தத்தைப் பாலுடன் சேர்த்து ஊட்டினாரோ என என்னை எண்ண வைக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்க இளம் பராயத்திலேயே அரசியலில் தீவிர நாட்டமும் பொதுவுடமைச் சித்தாந்தத்தில் அதீத பற்றும் கொள்வதற்கு வீட்டுச் சூழலும் ஒரு காரணமாக அமைந்திருக்கலாமே. மிக்க இளம் வயதிலேயே கம்யூனிஸ்ட் கட்சியின் வாலிப முன்னணியில் சேர்ந்து தீவிர அரசியலில் ஈடுபட்டமைதான் அவரது கல்வி முன்னேற்றத்திற்கும் தடையாகியதோ? 1965 மற்றும் 1970ம் 1975ம் ஆண்டிற்கான பாராளுமன்றத் தேர்தல்களிலே இடதுசாரி வேட்பாளர்களுக்காக தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டவர் 1972 ஆம் ஆண்டினிலே முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சியில் தன்னை முதன்மைப்படுத்தி இயங்கினார். 1972ஆம் ஆண்டு மேமாதம் 22ந்தேதி அன்றைய பிரதமராயிருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயகா இலங்கையை ஒரு குடியரசாகப் பிரகடனப் படுத்தினார். அன்றைய தினத்தினை தமிழ்க் கட்சிகள் துக்க தினமாகவே அனுஷ்டித்தன. எம்மவரில் பெரும்பாலோர் எதார்த்தமாகச் சிந்திப்பதிலும் பார்க்க உணர்வு பூர்வமாகவே சிந்திப்பார்கள் . ஆகவே அன்றைய தினத்தினை துக்கதினமாக அனுஷடிக்க வேண்டும் என்பதற்கு ஏக ஆதரவு. ஆனால் எதார்த்தமாகச் சிந்திக்கவல்ல ஒரு சிலர் கெங்காவின் தலைமையில் குடியரசு தினத்தினை வரவேற்கவே செய்தனர். அவர் எப்போதுமே தனது மனதிற்குச் சரி என்று பட்டதைச் செய்தார். எவருடைய எதிர்ப்புப் பற்றியும் சிந்திக்க அவர் தயாராயில்லை. கலங்கியதுமில்லை இலண்டன் வந்த பின்னரும் அதே இடது சாரிக் கொள்கையை அவர் நெகிழவிடக் கூடத் தயாராய் இல்லை.
கெங்காதரனுடைய அரசியல் சிந்தாந்தாந்தத்தில் அவர் என்றுமே தடம் புரளாது நிற்கிறார் என்றால் அதற்கு உறுதுணையாய் நின்ற அவரது பெறோர்கள் மற்றும் என்றும் அவர் எடுக்கின்ற அத்தனை முயற்சிகளுக்கும் கைகொடுக்கும் அவரது மனைவி மற்றும் இளவல்கள் சகோதரிகள் ஆகியோருடைய ஒருமித்த துணை பாராட்டுக்குரியது.

**சமூக முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட தொண்டன்:** அம்பனை ஒரு சிறிய கிராமம். மகாஜனக் கல்லூரி அங்கு இல்லாமல் விட்டிருந்தால் அப்பனை பற்றிப் பலர் அறிந்திருப்பார்களோ தெரியாது. கெங்காதரன் அம்பனையினை ஏனையோரும் அறிந்து கொள்வதற்கான முயற்சியை என்றுமே விடவில்லை. அம்பனை கலைப்பெருமன்றத்தின் ஸ்தாபகர்களில் ஒருவராகவும் அதன் முக்கிய உறுப்பினாகவும் விளங்கிக் காலத்துக்குக் காலம் நாடகங்கள், பட்டிமன்றங்கள் இலக்கிய விழாக்கள் என நடத்தி கிராமத்து மக்களது கலை, அறிவு வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்றதுடன் மன்றங்களுக்கிடையான நாடகப் போட்டிகளிலும் பங்கு பற்றி அம்பனையின் பெருமையை ஏனைய கிராமங்களுக்கும் தெரிய வைத்தவர்.

மகாஜனா என்றால் உதைபந்தாட்டம் என்பது யாழ்ப்பாணம் மாத்திரமல்ல இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கும் தெரிந்த பேருண்மை. கெங்காதரன் அவர்கள் பாடசாலைக் கல்வியை முடித்த பின்னரும் உதைபந்தாட்டத்திற்குப் போதிய ஊக்கம் கொடுக்க வேண்டும் என்பதில் பெரும் அக்கறை கொண்டிருந்தமையால் யாழ்ப்பாணத்து உதைபந்தாடக் குழுக்களுக்கிடையே அம்பனையில் மின்னொளி உதை பந்தாட்டப் போட்டியினை நடாத்தி வெற்றி கண்டவர். இவருக்கு முன்னர் வேறு எவராவது இத்தகைய ஒரு முயற்சியில் ஈடுபட்டிருந்தார்களோ யான் அறியேன். மகாஜனாவின் உதைபந்தாட்டச் சரித்திரத்தினையே நூல் வடிவில் கொண்டு வந்த பெருமைக்குரியவராகவும் உள்ளார்.

இலண்டன் மாநகரம் போய்விட்டார். தனக்கென ஒரு குடும்பம் உள்ளார். "தானுண்டு, தன்பெண்டு பிள்ளை, குடும்பம், தன் தொழில்" என்று அவர் இருந்திருக்கலாம் தானே. சரி அவர் படித்தபாடசாலை. எனவே மகாஜனாவின் முன்னேற்றத்தையும் பற்றிச் சிந்தித்தால் போதாதா?. அதை விடுத்து வீட்டிலேயே தங்க நேரமில்லாமல் எங்கெல்லாம் உழல்கிறார். எதற்காக?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத்துப் பாடசாலைகளின் பழைய மாணவர்கள் பலரினை ஒன்று கூட்டி தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் அமைத்தார். அதன் மூலமாக வருடா வருடம் இளைய தலைமுறையினரின் விளையாட்டுத்துறை விருத்திக்கு ஊக்கமூட்டி வருகின்றார். போதிய வசதி கொண்ட ஒரு மைதானத்தை வன்னியில் அமைப்பதற்கான ஆக்க வேலைகளிலும் ஈடுபட்டார்.

இலண்டனில் உள்ள ஈழத்தின் பல்வேறு கல்லூரிகளின் பழையமாணவர் சங்கங்கள் தமது வருடாந்த இராப்போசன விருந்துகளுக்கு இவரைப் பிரதம விருந்தினராக அழைத்துக் கௌரவிப்பதனைக் கண்டுள்ளேன். ஏனைய கல்லூரிப் பழைய மாணவர் சங்கங்கள் இவரை அழைத்துக் கௌரவிப்பதற்கான காரணம் என்னவாக இருக்க முடியும்? அவர் பாடசாலை வேறுபாடின்றி எல்லாக் கல்லூரிப் பழையமாணவர் சங்கங்களில் தன்னையும் இணைத்துக் கொள்ளும் நல்லிதயம் கொண்டுள்ளமையே காரணமாகும்.

தனது திருமணத்தின் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவினை ஒட்டி தெல்லிப்பழை பற்றிய ஒரு அருமையான சிறு நூல் ஒன்றினைத் தயாரித்துள்ளார். தெல்லிப்பழை பற்றி முழுமையான விபரங்களை அது கொண்டதாக உள்ளது.

**மகாஜனாமேல் மாறாத அன்புடைய பழைய மாணவர்:** தனது குடும்பத்தைப் பற்றி தினசரி சிந்திக்கிறாரோ தெரியவில்லை ஆனால் மகாஜனா பற்றி அவர் சிந்திகாத தினமே இருக்க முடியாது என்பது எனது எண்ணம். மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் இலண்டனில் தொடங்கி ஏறக்குறைய இருபத்துநான்கு ஆண்டுகள் முடிவுற்றுள்ளன. ஆரம்பம் முதலே அதன் ஒரு தொண்டனாகச் செயற்பட விரும்பினாரே அன்றி அதன் தலைமையை தன்னிலும் மூத்தவர்கள் ஏற்கவேண்டும, அவர்கள் வழிநடத்தலே சங்கத்தின் வளர்ச்சிக்கு வேண்டியது என்பதில் அவர் தீர்க்கமாக இருந்தார். அதே சமயம் பொதுச் செயலாளர் பதவியைப் பலவருடங்களாக ஏற்று சங்கத்தினைச் சீரிய முறையிலே செயற்பட வைத்தார். இறுதியில் கல்லூரியின் நூற்றாண்டு விழாச் சமயத்திலேதான் அதன் தலைமைக்குத் தேர்வு செய்யப் பட்டார். எல்லோரதும் ஏகோபித்த தேர்வு. அவர் மன்றத்துக்கு தொடர்ந்து பல ஆண்டுகள் அர்ப்பணிப்புடன் ஆற்றிய சேவைக்கான நன்றி உணர்வினைக் காட்டும் நற்செய்கை.

இலண்டன் பழைய மாணவர் சங்கம் மகாஜனாவின் வளர்ச்சிக்குப் பெரும் அளவினிலே உதவி வந்துள்ளது. பாடசாலை அதிபருடன் தொடர்பு வைத்து பாடசாலையினது தேவைகளை உணர்ந்து அதற்கான நடவடிக்கைகளைத் துரிதமாக எடுத்துள்ளது. போர்க்கால சூழலில் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு மதிய போசனம் வழங்குதற்கான நிதி உதவி செய்தது. பாடசாலையை செப்பனிடுவதற்கு வேண்டிய நிதி உதவி செய்ததுடன் நூல் நிலையத்தினை மீள் அமைப்பு செய்வதற்கும் நிதி உதவி வழங்கிற்று. சென்ற ஒக்ரோபர் மாதம் 12, 13, 14ந் தேதிகளில் கல்லூரியில் நடைபெற்ற நூற்றாண்டு விழாவினில் கெங்காதரன் கலந்து கொண்டார். 14ந்தேதி நூற்றாண்டு விழாவின் இறுதிநாள் நிகழ்வின் முதன்மை விருந்தினராக கௌரவிக்கப்பட்டதுடன் புனரமைப்புச் செய்யப்பட்ட கவிஞர் சின்னப்பா நினைவு நூல் நிலையத்தினையும் கெங்காதரன் திறந்து வைத்தார்.

**நட்புடமையைப் பேணும் நல்லிதயம் கொண்டவர்:** அவரது நண்பர்கள் பல்வேறு அரசியல் சித்தாந்தம் கொண்டவர்கள் ஆனால் அவரது நட்புடமையினுக்கு அவர்களது அரசியல் சித்தாந்தம் என்றுமே தடையாக இருந்ததில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தனது மனதிலே தோன்றுவதை மறைக்காமல் ஒளிவு மறைவின்றிப் பேசும் தன்மையுடையவராய் உள்ளமையால் அவர் அரசியல் கொள்கைகளை ஏற்காதவர்கள் கூட அவரது அரசியல் நேர்மைக்கு மதிப்பளித்து அவரை பாராட்டுவதைக் கண்டுள்ளேன்.

நண்பர்களுடைய நிகழ்ச்சிகள் எதுவாயிருந்தாலும் அவற்றினில் முழுமையாகப் பங்களிப்பதுடன் தன்னால் இயன்ற உதவியைச் செய்வது அவரது பண்பு.
ஒன்றினைக் கூறவேண்டும். அவரது முகத்தில் எந்த ஒரு உணர்வினையும் என்னால் கண்டு கொள்ள முடிவதில்லை. உள்ளத்தில் குமுறுகிறாரா? அல்லது உற்சாகமாக உள்ளாரா? என்னால் அறிந்து கொள்ள முடிவதில்லை. இது என் குறைபாடா? அல்லது அவரது நிலைப்பாடா?

அவர் ஆற்ற வேண்டியவை இன்னும் உள்ளன. எனவே இன்னும் பல்லாண்டு வாழ வாழ்த்துவோம்.

---

திரு பொ கனகசபாபதி, முன்னைநாள் அதிபர், மகாஜனக்கல்லூரி தெல்லிப்பழை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவை 60 ஐ எட்டும் மனிதம் கெங்காதரன்

தோழர் விசுவலிங்கம் சிவலிங்கம்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவரும், இடதுசாரி தோழருமான சிறீ கெங்காதரன் அவர்கள் அகவை அறுபதை எட்டுவது குறித்து வாழ்த்துவது சாலப் பொருத்தமானதாகும். பொது வாழ்வில் தமது நேரத்தையும், சக்தியையும் அதிக அளவில் செலவிடுவது மிகவும் குறைந்துள்ள இக் காலத்தில் தனது வாழ்வின் பெரும்பகுதியை சாமான்ய மக்களின் வாழ்வு உயர்வதற்காகவும், மனித அறிவுக்கான விடி விளக்காக அமையும் தனது பாடசாலையின் வளர்ச்சிக்காகவும், தான் வாழ்ந்த கிராமத்திற்காகவும் ஓயாது உழைக்கும் ஓர் இனிய மனிதராகவே நான் அவரைக் காண்கிறேன்.

தோழர் சிறீ கெங்காதரன் அவர்கள் சாதாரண தொழிலாளி ஒருவரின் மகனாகவும், பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய குடும்பத்தைச் சார்ந்தவராகவும் இருந்த போதிலும் உயர்ந்த இலட்சியங்களின் அடையாளமாக செயற்பட்டு வருபவர். இவர் தாயகத்தில் வாழ்ந்தபோது இலங்கைக் கம்யூ. கட்சியின் வாலிபர் அமைப்பின் முக்கிய செயற்பாட்டாளராகவும். தெல்லிப்பழையிலுள்ள அம்பனை என்ற சிறிய கிராமத்தின் பொது அமைப்புகளின் முக்கியஸ்தராகவும் காணப்பட்டார். உதைபந்தாட்டம், கிரிக்கட், விளையாட்டுப் போட்டிகள், நாடகம் போன்றவற்றை வளர்ப்பதிலும் மிகவும் சிரத்தை காட்டினார். அக் கிராமத்தின் கீர்த்தியை நாடறிய வைப்பதற்கு உழைத்த ஒரு முக்கிய பிரஜை என அழைப்பது மிகப் பொருத்தமானது. அவரது வீடு அமைந்த இடம் மகாஜனக் கல்லூரியின் அருகாமையாகும். அதனால் பல மாணவர்களின் சந்திப்பிற்கான இடமாகவும் இருந்தது. அது மட்டுமல்ல அவர்களது குடும்பம் இடதுசாரி இலடசியங்களுடன் வாழ்ந்ததால் பல முக்கிய அரசியல் தலைவர்கள் அங்கு தங்கி சிறு கருத்தரங்குகளை நடத்தும் இடமாகவும் அமைந்தது. தோழர் கெங்காதரன் அவர்கள் பல இடதுசாரித் தலைவர்களுக்கு அறிமுகமானவர் என்பதால் பலர் அவரை நன்கு அறிந்திருந்தனர். அம்பனை என்கின்ற பகுதி தந்தை செல்வா அவர்களின் தெல்லிப்பழைக் கிராமத்தில் இருந்ததாலும், மகாஜனக் கல்லூரி வட பகுதியின் முன்னணிக் கல்வி நிலையமாகவும் அமைந்ததாலும், காங்கேசன்துறை தொகுதி மிக முக்கியமான தொகுதி என்பதாலும் அங்கு தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர்களின் செயற்பாடு அதிகமாகக் காணப்பட்டது. இதனால் இவருடனும் நெருக்கமான உறவுகளை தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களும் பேணி வந்தனர்.

இவர் இடதுசாரிக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டவர் என்பதை விட அக் கொள்கைகளே சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் வழிகாட்டுதலை விஞ்ஞானபூர்வமாக கொண்டிருப்பதாக உறுதியாக நம்பிச் செயற்பட்டு வருபவர். இவர் பிரித்தானியாவில் பல பொதுச் சேவைகளில் ஈடுபடும்போது அவருக்கெதிராக செயற்படுபவர்கள் அவரது இடதுசாரிக் கருத்துக்களை மையமாக வைத்தே மறைமுகமாக எதிர்க்க முற்படுகின்றனர். ஆனாலும் அவரது தன்னலமற்ற பொதுச்சேவைக்கு மதிப்பளிக்க வேண்டிய தவிர்க்க முடியாத நிலையும் உள்ளது. ஐக்கிய இலங்கைக்குள் இன இணக்கத்தோடு வாழ்வதன் மூலமே அமைதியை காணமுடியும் என அவர் உறுதியாக நம்பிய போதிலும் அது சாத்தியமில்லை என பலமாக நம்புபவர்களுடன்தான் அவரது பொதுவாழ்வு தொடர்ந்தது. இது எவ்வாறு சாத்தியமாகிறது? இங்குதான் இடதுசாரிகளின் ஜனநாயகத்தின் மீதான அடையாளம் துல்லியமாகிறது. மாற்றுக் கருத்துக்களுடன் சகவாழ்வு சாத்தியம் என்பதை நடைமுறையில் நிருபிக்க முடிகிறது. மனித நேயம் அதன் அடிநாதமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தின் மீதான பற்றும் அதன் வளர்ச்சிக்காக பாடுபடும் மனப்போக்கும் மனிதனின் வாழ்வில் அழிக்க முடியாத இலட்சிய படிமங்களை உருவாக்கி விடுகிறது. இதனால்தான் அம் மனிதன் பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் தனது வாழ்க்கையைத் தொடர்ந்தபோதும் அவை அவனை வழி நடத்துகிறது. இது சிலரின் வாழ்வில்தான் சாத்தியமாகிறது. குறிப்பாக மேற்கு நாடுகளில் குடியேறியதும் குடும்ப வாழ்வு மிகவும் அழுத்தங்களில் அவதிக்குள்ளாகிறது. இதிலிருந்து விடுபடுவதற்காக பலர் தமது இலட்சியங்களை இடை நடுவில் கைவிட்டு விடுகின்றனர். ஆனால் சிறீ கெங்காதரன் போன்ற மிகச் சிலரே இந்த இனிய பயணத்தைத் தொடர்கின்றனர். பிரித்தானியாவில் இலங்கைத் தமிழர்கள் பலர் 80 களுக்கு முதலில் வந்திருந்த போதிலும் இலங்கை அரசியல் தொடர்பாக தீவிரமாக ஈடுபட்டதில்லை. உயர் பதவிகளை அலங்கரித்து தமது சுய கௌரவங்களை உயர்த்துவதிலேயே அவர்களது கவனம் இருந்தது. 70 களின் பிற் பகுதியில் இலங்கையில் பல்கலைக் கழக பிரவேசம் சிக்கலாகியதைத் தொடர்ந்து பல இளைஞர்கள் பிரித்தானியாவிற்கு வந்தனர். இவர்களே இலங்கை அரசியல் பிரச்சனைகளை வெளியுலகிற்கு தெரியப்படுத்தினர். தாயகத்து இளைஞர்கள் மத்தியில் வலுவான போராட்ட உணர்வுக்கான வித்தாக அமைந்தனர். அவ்வாறான எழுச்சியை ஏற்படுத்துவதிலும் அமைப்புகளை உருவாக்குக்குவதிலும் ஈடுபட்ட இளைஞர்களிலே இவரும் ஒருவர் என்பதை குறிப்பிட்டே ஆகவேண்டும். 1983 இல் இலங்கையில் வரலாறு காணாத இனக் கலவரம் இடம்பெற்ற போது அதுவும் ஏகாதிபத்திய ஆதரவு ஐக்கிய தேசிய கட்சியின் திட்டமிட்ட சதிக்கு எதிராக சகல முற்போக்கு சக்திகளையும் இணைப்பது அவசியம் எனக் கருதி **Eelam solidarity campaign** என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. இதன் செயலாளராக நீண்ட காலம் செயற்பட்டது மட்டுமல்லாமல் சர்வதேச அமைப்புகளுடன் நேச உறவை ஏற்படுத்துவதற்கு பிரதான காரணமாகவும் இருந்தார். இவரது காலத்தில் மிகப் பெரிய ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டது. இனப் பிரச்சனை சர்வதேச மட்டத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. பிரித்தானியாவில் தமிழர்களின் வரலாறு எழுதப்படுமானால் இவரது பங்களிப்பு தவிர்க்க முடியாத ஒன்று ஆகும். இதனால்தான் இவர் அகவை அறுபதை எட்டுவது முக்கியத்துவம் பெறுகிறது. வாழ்த்துதல் அவசியமாகிறது. தோழர் சிறீ கெங்காதரனும் நானும் இலங்கையில் அரசியலில் இணைந்து செயற்பட்டதால் பிரித்தானியாவிலும் அவருடன் இணைந்து செயற்பட வாய்ப்புக் கிடைத்ததால் பரஸ்பரம் தோழமை உறவு பலமாக வளரவும் உதவியது.

இச் சந்தர்ப்பத்தில் ஓர் வரலாற்று நிகழ்வையும் ஞாபகமூட்டுவது பொருத்தமானது. 1972ம் ஆண்டு இலங்கையின் வரலாற்றில் மிக முக்கியமான திருப்புமுனை ஏற்பட்டது. முதலாவது குடியரசு யாப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. ஏகாதிபத்திய பிடியிலிந்து இலங்கைத் தீவு முழுமையாக விடுவிக்கப்பட்ட தினம் இதுவாகும். இடதுசாரிகளின் மிக நீண்ட போராட்டத்தின் அறுவடை நாளாக அது அமைந்தது. ஆனால் தமிழர்கள் மத்தியிலே துக்க நாளாக தமிழ் தலைமைகளால் பிரகடனப்படுத்தப்பட்டது. இதற்குக் காரணம் சோல்பரி அரசியல் அமைப்பில் சிறுபான்மை இனங்களுக்கு பாதுகாப்பாக இருந்த 29வது சரத்து புதிய குடியரசு யாப்பில் இணைக்கப்படவில்லை. இதனைக் காரணமாக வைத்து தமிழ்ப் பகுதிகளில் பலத்த ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. தேசிய பொருளாதாரமும், அரசியல் கட்டுப்பாடும் அந்நிய ஆதிக்கத்தில் இருக்கும் வரை தேசிய சுதந்திரம் என்பது சாத்தியமில்லை எனவும், முதலில் ஏகாதிபத்திய பிடியிலிருந்து தேசம் விடுவிக்கப்பட வேண்டும் என்பது இடதுசாரிகளின் நீண்டநாள் கனவாக அமைந்திருந்தது. தமிழர்கள் மத்தியிலே 29வது சரத்து தொடர்பாக பிரச்சனைகள் இருந்தபோதிலும் முதலாவது குடியரசு யாப்பு சட்டத்தின் முன் சகலரும் சமம் என்பதை வற்புறுத்துவதால் பாகுபாட்டிற்கு எதிராக நீதிச் சேவையை அணுக முடியும் எனவும் 29 வது சரத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


செயற்பாட்டில் இருந்த நிலையிலும் கோடீஸ்வரன் அவர்களால் தொடுக்கப்பட்ட வழக்கு அதற்கான பாதுகாப்பை வழங்கவில்லை எனவும் வாதிடப்பட்டது.

தமிழ்த் தலைமைகள் நாடு ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுவிக்கப்பட்டதை மறைமுகமாக எதிர்ப்பதாகவே இடதுசாரிகளால் உணரப்பட்டது. இந் நிலையில் தமிழ் மக்களில் ஒரு சாரார் நாடு ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டதைக் கொண்டாடுவது வரலாற்றுக் கடமை எனக் கருதினோம். எனவே குடியரசு தின மலர் ஒன்றினை தமிழில் தயாரித்து பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் மிகப் எதிர்ப்புகள், பயமுறுத்தல்களுக்கு மத்தியில் நிறைவேற்றினோம். இந் நிகழ்வுக்கான பிரதான இயக்கு விசையாக இருந்து செயற்பட்டவர் தோழர் சிறீகெங்காதரன் அவர்களாகும்.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக பிரித்தானியாவில் இவர் வாழ்ந்துவருகின்ற போதிலும், அவரது பொதுப் பணி இன்னமும் தொடர்கிறது. தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பல கல்விமான்களை மட்டுமல்ல சமூக சேவையாளர்களையும் உருவாக்கியுள்ளமைக்கு இவர் சிறந்த உதாரணமாகும். சமீபத்தில் இவர் அக் கல்லூரிக்குச் சென்றபோது இன்றைய சந்ததியைச் சேர்ந்த மாணவர்கள் என்ற போதிலும் அவரைப் பிரதம விருந்தினராக கௌரவித்தது பெருமை அளிப்பதாக இருந்தது.

மனித சமூகத்தின் உயரிய இலட்சியங்களுக்காக தமது வாழ்வை ஒப்படைத்து வாழும் இனிய மனிதரான தோழர். நாக சிறீ கெங்காதரன் அவர்களின் பணி தொடர்ந்து நீடிக்க வேண்டுமென வாழ்த்தும் அதே வேளை அவரது அன்புத் துணைவியாரான ஜெயகௌரி அவர்களை குறிப்பிடாமல் இருக்க முடியாது. பொதுவாழ்வு என்பது குடும்ப வாழ்வு சுவைக்கும்போதுதான் சௌகரியமாகிறது. மேற்கு நாடுகளில் வாழ்வு என்பது போராட்டம் நிறைந்ததாகவே உள்ளது. நேரம் என்பது பணத்தோடுதான் பொருத்திப் பார்க்கப்படுகிறது. பொதுவாழ்வில் ஈடுபடும் ஒருவர் நேரத்தைப் பணத்தோடு பொருத்திப் பார்ப்பாராகில் அவரால் அப் பயணத்தைத் தொடர முடியாது. அதுவும் இடதுசாரி அரசியலில் அர்ப்பணம் செய்பவரால் மிக அதிக அளவு பளுவைச் சுமக்க வேண்டி ஏற்படுறது. இதனை பொறுமையோடு சுமந்து செல்லும் அவரது மனைவிக்கும் எமது வாழ்த்துக்கள் சாரும்.

விசுவலிங்கம் சிவலிங்கம், கெங்காதரனுடன் 40 அண்டுகளாக இணைந்து நிற்கும் தோழர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 to 60

**கணேசலிங்கம்.**

எனக்கு வயது 6. அரிவரி படிக்கிறன். என்ரை வீடு மகாதனையில் உள்ளது. வலது காணி வயிரவர் கோவில். இடது காணி அண்ணா வாசிகசாலை. அங்கு அடிக்கடி ஒரு கறுவலும் ஒரு வெள்ளையும் சந்தித்துக் குசுகுசுப்பார்கள். அவர்கள் வீபி என்றும் செல்வா என்றும் கதைப்பது எனது காதில் கேட்கும். வெள்ளை – எம்மூரவர். சொக்கநாதர் யோகநாதன். இவர் பின்பு TROவின் ஆரம்பகாலப் பொறுப்பாளர். கறுவல் கொம்யூனிஸ்ட் வாதி. 60 பத்தாது.

எனக்கு வயது 16. நண்பன் சபேசன் அண்ணனுக்குக் கலியாணம் என்று காட் தந்தான். நாளை அண்ணை லண்டனால் வாறான். வந்து கதையன் எண்டான். எனக்கு விசர் பிடிச்சுது. சிங்கப்பூர், டுபாய், சவூதி, கப்பல் எண்டு வாறவையோடு எனக்குத் தமிழ் தெரிந்தும் கதைக்கேலாது, பேசேலாது. கிட்ட நெருங்கேலாது. 70களில் வெளிநாடு டிமாண்ட். அண்ணன் லண்டனோ. ஐயோ லண்டன்காரன் எண்டாலே நடுங்கும்.. "அப்போயின்மன்ற்" எடுத்தே கதைக்கேலாது 70களில். என்ன பகிடி என்றால் எனக்கு இங்கிலிசும் தெரியாது. எப்படிக் கதைப்பார். Try பண்ணுவம் என்ற நம்பிக்கையுடன் hello கெங்கா அண்ணை எண்டன். இருத்தி வச்சு இரண்டு மணித்தியாலம் அறுவை. ஆச்சரியம் என்ன கேட்டாலும் ஓம் ஓம் இல்லை என்ற பதில்கள் விளக்கத்துடன். எந்த வேளையிலும் கோபப்பட்டதைக் காண முடியவில்லை. 60 பத்தாது.

ஏனக்கு வயது 26. எனது பள்ளி மகாஜனா கடவுள் தந்த கொடை. அங்கு பெயர் போனதில் பந்தடியும் ஒன்று. உதைபந்து சரித்திரம் பற்றிய மலர் ஒன்று 1971ம் ஆண்டு வந்திருந்தது. அடிச்சது கெங்காதரன். மறுக்கவே முடியாது. புதினம்!. கறுப்பு வெள்ளை போட்டோக்கள். கலர்த் தட்டுப்பாடு! காசுத் தட்டுப்பாடு! அச்சுக்கூடம் தட்டுப்பாடு. மலர் ஆசிரியர் தட்டுப்பாடு!. மலர் வாங்குபவர்கள் தட்டுப்பாடு!.அட்வேட் தட்டுப்பாடு!. துணிச்சல் தட்டுப்பாடு. சிறீமா காலம் எல்லாம் தட்டுப்பாடு தானே. சாதனை. ஒரு எழுத்துப் பிழை கிடையாது. மலர் மிஞ்சியது கிடையாது. காசு மிஞ்சியது கிடையாது. ஒரு குறை கிடையாது. 40 வருடங்கள் முன் நினைக்கப் புல்லரிக்கின்றது. என்னை இரசிகனாக மாற்றியது TPயின் கோச்சிங்கும் கெங்காவின் மலரும். 60 பத்தாது.

கெங்காவின் விலாசம்!. மகாஜனாவின் கிணறு, கெங்கா வீட்டுக்குப் பங்கு. மகாஜனா வேலியால் எட்டிப்பார்த்தால் கெங்கா வீட்டுக் குசினி தெரியும். மகாஜனா சிக்சர் அடித்தால் கெங்கா வீட்டு ஓடு உடையும். மகாஜனா சாம்பியன் அடித்தால் கெங்கா வாசலில் நிறைகுடம் இருக்கும். மகாஜனா என்ற பக்கிங்காம் பலஸ் பக்கத்தில் இருந்தவர் கெங்கா. 60 பத்தாது.

எனக்கு வயது 36. லண்டனில் மகாஜனாச் சங்கமாம். 87இல் தொடங்கியது. பழைய மாணவர்கள் என்று கும்மாளம் கொட்டவும் பார்ட்டி கொண்டாடவும் ஐயரட்னம் அப்பா துரையப்பர் கட்டிய பள்ளிக்கூடம். முன்னின்று உதவும் அற்புதம். 60 பத்தாது.

எனக்கு வயது 46 லண்டனில் கெங்காவின் சேவை போதும் என்று காய் வெட்டி விட்டார்கள். வெட்ட வெட்டத் தழைத்து சிரிச்ச முகத்துடன் ஓடித்திரியும் கெங்கா தெல்லிப்பழையின் நூற்றாண்டு விழாக் கதாநாயகன். லண்டனிலும் மீண்டும் கதாநாயகன். கெங்காவின் 60ஐ வாழ்த்த 60 பத்தாது!

---

முகாஜனன் செ கணேசலிங்கம், செயலாளர், மகாஜன பழைய மாணவர் சங்கம் (ஐஇ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sri Gengatharan – a True TSSA Man

***A Thiruketheeswaran***

I am pleased to write my message to the souvenir being published to celebrate the 60th Birthday to our friend Mr Nagalingam Srigengatharan.

I came to contact with Genga in 1992 at Wimbledon at the inauguration meeting of Jaffna Schools Sports Association (JSSA). Twelve of us from different schools of Jaffna district got together with only an aim to establish a sporting organisation to conduct sporting competition between Tamil Schools old students associations in the United Kingdom.

I can remember the enthusiasm and the dedication of Genga to find a sponsor to finance the inaugural sporting competition. I was surprised to see the number of business men were willing to support Genga and take up sponsoring JSSA (UK). I was only a supporter of JSSA (UK) for 3 to 4 years after being the founder Treasurer but Genga continued in the executive committee as secretary for many years and then elected as the President in 2007. During 1996/97, Genga as a member of the executive committee supported the move of changing the organisation's name from JSSA (UK) to Tamils Schools Sports Association (UK) - TSSA (UK) to accommodate all the Tamil schools in Sri Lanka.

In 1998 at the request of many, Genga and I were elected as Secretary and Treasurer respectably. That is the year I became very friendly with Genga when we were forced to re-establish and re organise the finances of TSSA (UK) which was in disarray. One of Genga's good quality was being cool and calm, when there were major issues causing turmoil with continuing sporting events. I was impressed by Genga's determination and support for TSSA(UK) when we went to Ealing council to convince them to reverse their decision and allow us to use **Warren Farm Sports Centre** to have our annual events.

Genga was instrumental to embark on projects to fund JSSA (Jaffna) activities in Jaffna and then to coordinate the planning the necessary set up and the funding for a **Sports Academy in the North East of Sri Lanka called SANE.** We all were abele to see the wonderful arrangements he made to organise meeting of TSSA members with North East Sporting coordinators when visited Sri Lanka.

The plan to fund, Sports academy for North East (SANE) was spearheaded by Genga and we were able to see his ability to execute the plans to raise the funds in several ways. One of his pet plan to generate income was to organise food stalls and restaurants at the TSSA and other sporting events to support the SANE project. It was fascinating to see him in planning and executing it from plan the marquee position to produce the food for sale and collect money at the till.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Everyone admire his dedication in organising and working to gather with any new one irrespective of their believes to have successful events year after year for the last twenty years.

Above all Genga's vision in everything he embarked amused everyone. His imagination to plan the stage for prize giving, set up the flag posts, layout the marquees, designing of food stalls / restaurant, plan the banners and leaflets, plan to have flags for all the schools with same design, above all designing the brochure amused everyone with in TSSA and from other organisations.

It is greatness of Genga, that he does not impose his political believes when he works in the non political organisations. We all know his strong political affiliations but he is always ready to listen to others and respect their views even they were contradicting with his views. It is always interesting to see him arguing his views with a smiling face.

We were invited for his 50th birthday party and I cannot believe now that quickly been invited for his 60th birthday. We all love to have the company of his wife Jeya Gowri and son Janagan who were very supportive of all the activities taken up by Genga.

My wife, children and I and also on behalf of TSSA (UK), We wish Genga a Happy Birthday and wish him, Jeya and Janagan a Healthy, Happy, Long life.

***Arunasalam Thirukketheeswaran, Founder member, Treasurer 1992, 1998, 1999 2005 & 2006 President 2010 & 2011, Tamil schools sports Association (UK)***




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Genga – A unique Person

***Mahjanan W Thayalan***

I find it a pleasure to write a few words about Mr. Nagalingam Srigengatharan affectionately called Genga by everyone for his 60$^{th}$ birthday celebrations. I have known Genga and his family since childhood. We were from the same village, and are family friends and fellow Mahajanans.

His social work started from his school days in Sri Lanka. He was instrumental in setting up 'Shooting Stars', a cricket club and 'Kalai Peru Mantram' a cultural organisation in Ampanai, Tellippalai. Cricket, football matches, dance and music festivals were organised in the village. He also participated in political campaigns supporting social justice and equality.

Mahajana College, Tellippalai started as a small village school in 1910, gaining recognition and reputation as a super grade secondary school, winning National championships in sports and in dramatic competitions, as well as sending large numbers of students to universities. Genga's family lived next door to Mahajana College. The water supply for the School came from a shared well, half of which stood in their land. Genga's family have a special place for Mahajana in their heart. Mahajana excelled in education and sports particularly in football during 1960 – 1980. I recall football finals that were played in the Thuraiappa stadium in Jaffna town which used to be a colourful outing in those days. Genga used to organise the coaches for fans and a 'cheering group' which was very vocal and could compete with today's fans.

He is proud and passionate about Mahajana, committed and dedicated to promote and preserve Mahajana's excellence throughout the world. Genga was the architect in forming the Mahajana College Old Students Association in the UK. I have had a close association with Genga in the committee since it was formed in 1987. He has been serving in the Executive committee since it was formed, Six years as assistant secretary, twelve years as the secretary and currently as the president, and deservedly so during the centenary year of the school. We worked very closely during my four years as secretary and six years as president. He has worked tirelessly hard with his fellow members to develop the OSA as one of the leading organisations. It was not easy to organise events in the early years. The ICT facilities which we enjoy now were not available then. Yet, sports, dramas, music/dance programmes, open days, magazines and newsletters were all organised during the early years of the organisation. They were very successful and enabled us to help the school during the troubled times back home. As well as organising such events, Genga and his family are always the last people to leave after tidying up in any function.

Genga has a great and in-depth knowledge of Mahajana's history, teachers, sports personalities / academics and their achievements in the old and current generation. He knows practically everyone and their background, not only students of Mahajana but other schools in the neighbourhood as well.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I have always admired Genga's cool head and character. Our political views maybe different, but he never tries to impose his views on others or influence their beliefs / thinking. He stands up for what he believes in at committee meetings but he will abide by the committee's decision even if it goes against what he stands for. He respects people for their achievements, irrespective of their views or background and will be the first person to honour them. In a time where it might not be possible, even his opponents have respect for him.

Genga is involved in several organisations and a well known popular person in the London borough of Lewisham. He is not a religious person but respects all faiths. He attends all the social occasions, programmes, weddings and funerals in the local community, and always without doubt helps people in need.

He is an exceptional person who has contributed a great deal to the community. As the saying goes, behind every good man there is a strong woman. Mrs Gowri Gengatharan remained a tower of strength for Genga with patience and tolerance. We should thank Gowri for her help and support in looking after the family affairs, and supporting Genga's endeavours with his community work.

My family and I congratulate Genga and Gowri on this 'mani-vila' occasion and pray for a long, happy and healthy married life.

---

***Mahajanan W Thayalan, President 1995-2001, Secretary 1989-1993 (Mahajana OSA-UK)***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட நாகலிங்கம் சிறிகெங்காதரன்

உடன் பிறவாத தம்பி **சுப்பிரமணியம் சிறிகாந்தலிங்கம்**

மகாஜனக் கல்லூரியின் பொற்காலம் என அறியப்பட்ட 60களிலும் 70களிலும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, கல்வி, விளையாட்டு, நாடகம், விவசாயம், சாரணியம் போன்ற எல்லாத்துறைகளிலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் மாத்திரம் அல்லாமல் அகில இலங்கையிலும் முதலாந்தரக் கல்லூரியாக விளங்கியது. திரு ரி ரி ஜயரத்தினம் அவர்கள் அதிபராக இருந்த காலத்திலும் அதன் பிற்பாடும் அதிபர்களினதும் ஆசிரியர்கள் மாணவர்களினதும் கடின உழைப்பால் மகாஜன மாதா பெருமை மிக்கவளாகத் திகழ்ந்தாள்.

இந்த வகையில் 1966ம் வருடம் மகாஜனக் கல்லூரியின் சுப்பிரமணியம் ஞானசேகரம், கந்தையா செல்வரட்ணம், க. கருணாகரன், எஸ் கார்த்திகேயலிங்கம், சுப்பையா தில்லைநடேசன் சுப்பிரமணியம் தண்டிகைஇளமுருகன், சுப்பிரமணியம் கணேசலிங்கம், நாகேந்திரம்.போஜன், நாகலிங்கம் சிறிகெங்காதரன் ஆகிய ஒன்பது சாரணர்கள் இங்கிலாந்தின் மதிப்புக்குரிய மகாராணி எலிசபெத் அம்மையாரிடம் விருதுபெற்ற இராணி சாரணர்களாக விளங்கினார்கள். இவர்கள் இராணி சாரணர்களுக்கான எண்ணிக்கையில் யாழ் மாவட்டத்தில் முதலாவதாகவும் இலங்கை முழுமையிலும் இரண்டாவதாகவும் விளங்கி மகாஜன மாதாவிற்குப் பெருமை சேர்த்தனர். இந்த ஒன்பது பேரும் அப்போதய மகா தேசாதிபதி வில்லியம் கோபல்லவவிடம் கண்டியில் வைத்து இந்த விருதினை நேரடியாகவே பெற்ற பெருமைக்குரியவர்கள்.

இந்தக் காலகட்டத்தில் தான் நான் முதன் முதலில் திரு கெங்காதரன் அவர்களை அறிந்து கொண்டேன். மேலே குறிப்பிட்ட சுப்பிரமணியம் கணேசலிங்கம் என்பவர் எனது அண்ணனாவர். இவர் கெங்காவின் நண்பனாக இருந்தவர். இதைவிட எனது அக்கா பத்மினியும் பெண்சாரணியத்தில் (Girls Guide) இருந்த காரணத்தினாலும் 1966முதல் நானும் குருளைச் சாரணனாக ஆரம்பித்து தொடர்ச்சியாக சாரணனாக இருந்த காரணத்தினாலும் மூத்த சாரணனான திரு கெங்காதரனை மதிப்புக்குரிய ஓர் அண்ணனாகவே ஏற்றேன். என் அண்ணருக்குக் கொடுத்த அதே மரியாதையை இவருக்கும் கொடுத்து வருகின்றேன். இவ்வாறாக கீழ்ப்படிவுள்ள சாரணனாகவும் ஓர் நண்பனின் தம்பியாகவும் இருந்து மதிப்புக் கொடுத்து வந்த நான், 70களின் ஆரம்பத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தால் கெங்கா அண்ணருடன் மாறுபட்ட கருத்துடையவனாக மாறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

திரு கெங்காதரனின் தந்தையார் அமரர் நாகலிங்கம் அவர்கள் ஓர் சமதர்மவாதி. இடதுசாரிக் கட்சியான சமசமாஜக் கட்சியை ஆரம்ப காலத்தில் இருந்து ஆதரித்து வந்தவர். வர்க்கம் என்பது ஏழை – பணக்காரன், தொழிலாளி – முதலாளி எனபனவே தவிர தமிழன் - சிங்களவன் என்ற வேறுபாடு அல்ல என்பது சமதர்மக் கோட்பாடு. கால்மாக்ஸ் கூறிய கருத்துக்களில் அசையாத நப்பிக்கை கொண்டவர். அத்தகைய தந்தையாரின் மூத்தமகனாகப் பிறந்த திரு கெங்காதரன் அவர்கள் தனது தந்தையார் காட்டிய பாதையில் சென்று, தனது இழமைப் பராயத்தில் இருந்தே ஒரு சமதர்மவாதியாகவும் சமூக ஒடுக்குமுறைக்கு எதிரான கொள்கை உடையவராகவும் விளங்கினார். இந்த வகையில் திருவாளர்கள் காராளசிங்கம், வைகுந்தவாசன், வ பொன்னம்பலம் போன்ற சமதர்மக் கோட்பாடுடையவர்களுடன் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலையில்தான் 1972இல் இலங்கை, குடியரசாக மாறி, புதிய அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. திரு கெங்காதரனும் ஏனைய இடதுசாரிகளும் ஏகாதிபத்திய, முதலாளித்துவப் பெரிய பிரத்தானியாவின் ஆட்சியில் இருந்து முழுமையாக விடுபடும் ஓர் நிகழ்வாகவே, இலங்கை குடியரசாக மாறுவதை நினைத்தார்கள். புதிய அரசியலமைப்பு சிறுபான்மை இனங்களை 2ம் தரப் பிரசைகளாக மாற்றுவதை ஒரு பிரச்சனையாகவே எடுக்கவில்லை. மேலும் ஐக்கி கூட்டு முன்னணி அரசாங்கம் அறிமுகப்படுத்திய தரப்படுத்தல், வசதி குறைந்தவர்களுக்கு வாய்ப்பு அளிப்பதாக நினைத்தார்களே தவிர தமிழ் மாணவர்களின் எதிர்காலம் சிதைக்கப் படுவதைப் பற்றி சிந்தித்தும் பார்க்கவில்லை.

இந்த நிலையில் தான் திரு கெங்காதரன் அவர்களுடனும் அவரது சகாவான திரு சிவலிங்கம் போன்றவர்களுடனும் நான் முட்டி மோதவேண்டி ஏற்பட்டது. தந்தை செல்வா புதிய அரசியலமைப்பை நிராகரித்து தனது பாராளுமன்ற பதவியை ராஜிநாமாச் செய்தார். இதன்பின் நடைபெற்ற காங்கேசன்துறைத் தொகுதி இடைத்தேர்தலின் போது நான் தந்தை செல்வாவை ஆதரித்துப் பிரச்சாரம் செய்தேன். திரு கெங்காதரன் அவர்கள் அமரர் வி பொன்னம்பலத்தை ஆதரித்தார். இதன் காரணமாக இவருடன் முட்டி மோதியவன் நான்.

இந்தக் கட்டத்திலும் கெங்காவிடம் வைத்திருந்த மதிப்பை இழக்கவில்லை. ஏனைய சிலர் அவரையும் அவரைச் சார்ந்தோரையும் துரோகி என்று பட்டம் சூட்டியது போல் நான் சூட்டவில்லை. மாறாக இலட்சியவாதி என்றே எண்ணினேன். சமதர்மக் கொள்கைகளை ஆதரித்து எல்லோரும் சமனாக இருக்க வேண்டும் என்ற கொள்கைக்காக உயிரையும் கொடுக்கத் தயாராக இருந்த ஒருவரை இலட்சியவாதி என்றே என்னால் நம்ப முடிந்தது. ஆனாலும் அவரது இலட்சியங்கள் ஏட்டுச் சுரக்காய் என்பது எனது கருத்தாக இருந்தது. சிங்கள மக்கள் மத்தியில் உண்மையான இடதுசாரிகள், சமதர்மவாதிகள் இல்லாமல் போன 70களில் தொடர்ந்தும் தேசியக் கட்சிகளை ஆதரிப்பது தவறு என்பதே எனது வாதம்.

அரசியல் காரணமாகவும் குடும்ப பாரம் காரணமாகவும் உயர்கல்வி நோக்கினாலும் திரு கெங்காதரன் 1975இன் இறுதியில் இங்கிலாந்துக்கு வந்தார். நானும் 1986இல் சட்ட படிப்பிற்காக இங்கிலாந்து வந்தேன். ஏறத்தாள 10 வருட இடைவெளியின் பின்பாக அவரை லண்டனில் விக்ரோறியா என்ற இடத்தில் அவர் நடாத்திய பெற்றோல் நிலையத்தில் வேலைபழகுவதற்காகச் சென்று சந்தித்தேன்.

இலங்கையிலே அம்பனை கலைப்பெருமன்றம் என்ற கலைக்கூடம், சூட்டிங் ஸ்ரார் என்ற விளையாட்டுச் சங்கம், போன்ற சமூக அமைப்புக்களை அமைத்து சமூகசேவை செய்தும் உயிரைப் பணயம் வைத்து தமிழ் ஈழ விடுதலைப் போராளிகளின் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் சமத்துவம், சமதர்மம், கம்யூனிசம் எனப் பேசித்திரிந்தவர் எப்படி பெற்றோல் நிலையம் நடாத்தி முதலாளியாக முடியும் என என்னை நானே கேட்டுக்கொண்டேன். சமூகத்தையே நேசித்து சமூகத் தொண்டாற்றும் ஒருவரால் தொடர்ந்தும் எல்லாவற்றையும் சகித்துக்கொண்டு முதலாளியாக நீண்டகாலம் இருந்தவிட முடியாது என்பது உண்மை. அந்த உண்மை திரு கெங்காதரனிடம் பொய்த்துப் போய் விடவில்லை. குடும்ப பாரம் காரணமாக உயர் கல்வியைக் கைவிட நேரிட்டது. அதேபோல இயல்பாகவேயுள்ள சேவை மனப்பான்மையால் தனது வியாபாரத் தொழிலிலும் அவரால் நீண்டகாலம் நீடிக்க முடியவில்லை.

இலங்கையில் தமிழ்ஈழத்திற்கு எதிராகச் செயற்பட்டது உண்மையாக இருந்த போதிலு ம் இங்கிலாந்தில் ஒரு அனுதாபியாக, தமிழ்மக்களின் பிரச்சனைகளை உணர்ந்தவராகி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய அரசியலைக் கைவிட்டவராகவே இங்கு காணப்பட்டார்.

1987இற்கு முன் இலங்கைக்கு வெளியே மகாஜனக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் எங்கும் இருந்தது கிடையாது. இன்று இங்கிலாந்து, கனடா, பிரான்ஸ், சிட்னி, மெல்போன், ஜேர்மனி, நோர்வே போன்ற நாடுகள் மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கங்கள் இருப்பதற்கான முழுப்பெருமையும் திரு கெங்காதரன் அவர்களையே சாரும். 1987இல் அவரின் முயற்ச்சியின் மூலமே இங்கு முதன்முதலில் மகாஜனப் பழைய மாணவர் சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டது. இதைப் பின்பற்றியே மகாஜனாவின் ஏனைய பழைய மாணவர் சங்கங்கள் பிற நாடுகளில் உருவாக்கப்பட்டன.

திரு கெங்காதரன் 1987இல் மகாஜனக் கல்லூரியின் ஐக்கிய ராச்சிய பழைய மாணவர் சங்கத் தலைவராக வருவதற்கான விருப்பைத் தெரிவித்திருந்தால், போட்டி இன்றியே ஏகமனதாகத் தெரியப்பட்டிருப்பார். அவ்வளவுதூரம் 1987இன் ஆரம்ப விழாவிற்கு வருகைதந்த மகாஜனன்கள் அவரில் நம்பிக்கை வைத்திருந்தனர். ஆனால் அவர் அதை விரும்பாமல் இந்த நாட்டில் வாழும் மூத்த மகாஜனன் டாக்டர் நவரத்தினம் அவர்களையே தலைவராக்கினார். அதைத் தொடர்ந்தும் தன்னைவிட வயதிலும் தகுதியிலும் கூடியவர்கள் எனத் தான் நினைத்த திருவாளர்கள் நற்குணம் , தயாளன், இராமநாதன் போன்றோரைத் தலைவர்களாக்கியதன் பின்பே தான் தலைவராகும் விருப்பத்தைத் தெரியப்படுத்தினார். துரதிஷ்டவசமாக சரித்திரம் அறியாத மகாஜனன்கள் அவரை இரு தடவை தோற்கடித்து விட்டார்கள். மூன்றாம் முறையே தலைவராகத் தெரிவு செய்தார்கள்.

**இ**லங்கையில் சமூக அமைப்புக்ககள் பலவற்றை உருவாக்கித் தொண்டாற்றிய ஓர் சமூக சேவகனை,

**ச**மதர்மக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்த ஓர் சமத்துவ வாதியை, **ம**காஜனாவின் பழைய மாணவர்களை இணைத்து இங்கிலாந்தில் பழைய மாணவர் சங்கம் உருவாக்கக் காரணமாக இருந்த உண்மையான மாகாஜனனை,

**இ**தன் மூலம் உலகின் பலபாகங்களில் மகாஜன பழைய மாணவர் சங்கங்கள் உருவாக காரணமாக இருந்தவரை,

**இ**லங்கையில் வேறு எந்தக் கல்லூரியும் சாதிக்காத ஒன்றை, அதாவது சர்வதேச மகாஜனன்களின் மாநாட்டை கொழும்பில் 2003இல் நடாத்தக் காரணமாக இருந்தவரை,
**26**மைல்தூரம் லண்டனுக்குக் குறுக்கே லுயிசாமில் இருந்து வெம்பிலிக்கு 18வருடங்களாக தம்பிமார், தங்கைமார், மைத்துனர்கள் புடைசூழ மனைவி மகனுடன் கிடாரங்கள், சமையல் பாத்திரங்களை, அரிசி காய்கறிகளை காவிவந்து சமைத்து விளையாடிக் களைத்த மகாஜனன்களுக்குச் சாப்பாடு போட்டுச் சங்கம் வளர்த்த இந்த மனிதனை

**த**ன்னைவிட தகுதியான நான்கு பேரை உரிய மரியாதைப்படி தலைவராக்கி, தான் தோற்றுவித்த சங்கத்தில் 18வருடங்களின் பின்பாக தலைவராக விரும்பிய ஓர் சமூக சேவகனை – உண்மையான மகாஜனனை,

**தா**ன் போட்டுக்கொடுத்த மேடைகளில் மற்றவர்களை ஏறவிட்டு தன் மகனையும் சகோதரங்களையும் அடுப்படி வேலைபார்க்க விட்ட அந்த உண்மையான சேவகனை தோற்கடித்த அந்தக் காட்சி – அவர்தம் தம்பி, தங்கைகள் கலங்கி நின்ற காட்சி மிகவும் நெஞ்சைக் கலக்கும் ஓர் பழியாக அன்றும் இன்றும் நான் உணர்கின்றேன். தமிழ்மக்கள் இன்று உள்ள நிலைக்கு நான் விடுகின்ற அதே கண்ணீரைத்தான் அன்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் திரு இராமநாதன் போன்றோரும் விட்டோம். நான் எனது கடமையில் இருந்து தவறியவனாக உணர்ந்தேன். யூலிய சீசருக்கு நடந்த நிகழ்ச்சிதான் என்கண்முன் நின்றாடியது. அண்ணர் கெங்கா அவர்களை எதிர்த்துப் போட்டியிட்ட தம்பி விமலதாசை அன்றும் இன்றும் நான் தவறு கூறவில்லை. அவரும் ஒரு சிறப்பான மகாஜனன். அது தவிர தான் செயல்வீரன் என்பதை பின்னால் வந்த நான்கு ஆண்டு காலப்பகுதியில் நிரூபித்தார். அண்ணன் கெங்கா தோற்கடிக்கப்பட்ட விதத்திற்காகவே நான் கவலைப்பட்டேன்

இங்கிலாந்தில் இவரது பணி தான் கல்விகற்ற தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கு மட்டுமின்றி இலங்கையிலுள்ள அனைத்துத் தமிழ்ப் பாடசாலைகளுக்கும் வியாபித்துள்ளது. இலங்கைத் தமிழ்ப் பாடசாலைகள் ஐக்கிய இராச்சியச் சங்கம் ஒன்றினை 1992ம் ஆண்டு நண்பர்களுடன் சேர்ந்து உருவாக்கிய திரு கெங்காதரன் அவர்கள் அதன் செயலாளராகவும் தலைவராகவும் செயற்பட்டு தனது சேவையை இலங்கையில் உள்ள தமிழ்ப்பாடசாலைகளுக்கு மாத்திரமன்றி இந்த நாட்டிலுள்ள தமிழ்ச் சிறார்களுக்கும் வழங்கியுள்ளார். 1967ம் ஆண்டு யாழ்ப்பாணக் கச்சேரிக்கு முன்னால் அமைந்துள்ள பழைய பூங்காவில் நடைபெற்ற சாரணியப் பாசறையில் திரு கெங்காதரன் அவர்கள் எமது கல்லூரிக் கொடியை அதற்கு ஏற்ற நுட்பமான முறையில் ஏற்றியதைக் கண்டவன் நான். இன்றும் அவர் வருடா வருடம் தமிழ்ப்பாடசாலைகளின் கோடைக்கால விளையாட்டு விழாவிலே மகாஜனக் கல்லூரிக் கொடியை மாத்திரமன்றி அனைத்துப் பாடசாலைகளின் கொடிகளையும் ஒழுங்குமுறையில் கட்டி ஏற்றுவதை காணும்போது, மகாஜனன் எங்கும், எப்போதும் முன்னோடி என்ற உண்மை மீண்டும் மீண்டும் உணர்த்தப்படுகின்றது. ஏனெனில் சில திறமை சிலரிடம் மட்டுமே உள்ளது.

தான் நினைத்ததையே கூறி, தான் கூறியதையே நினைத்து, வெற்றியோ, தோல்வியோ எல்லா மனிதரும் சமன் என்ற சமதர்ம கொள்கையை உயிர் ஆபத்துக்கள் ஏற்பட்ட நேரத்திலும் கைவிடாது, ஏணிப்படியாகவும் மெழுகுதிரியாகவும் வாழ்ந்து சமூக மேம்பாட்டுக்காக தன் உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணித்து வாழும் நான் கண்ட இலட்சியவாதி கெங்காதரன்.

பொதுவாழ்வில் சேருவது தன்னையும் தனது குடும்பத்தையும் உயர்த்திக் கொள்ள என்று இருக்கின்ற இந்தக் காலத்திலே, பொதுவாழ்வின் மூலம் தனது நன்மைகளை தியாகம்செய்து எழிமையான வாழ்வுவாழும் திரு கெங்காதரன் தனது தனிப்பட்ட திறனாலும் அரசியல் தொடர்புகளினாலும் இன்று ஓர் கோடீஸ்வரனாகவே வாழ்ந்திருக்க முடியும். அவரது சமதர்ம மனம் அத்தகைய வாழ்க்கையை விரும்பவில்லை. இதனால் அவர் எல்லார் மனங்களிலும் நிறைந்த மரியாதைக்குரிய சமூகத் தொண்டனாக் திகழ்கின்றார்.

அவரது 60ம் ஆண்டு நிறைவு நாளில் நீடூழிவாழ வாழ்த்துகின்றேன்.

---

சுப்பிறமணியம் சிறிகாந்தலிங்கம், சட்டத்தரணி, அறங்காவலர், மகாஜன நூற்றாண்டுவிழா நிதியம





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்யூனிஸ்ட் கட்சி அரசியலும் கெங்காவும்

திரு கெங்காதரனின் தந்தையார் திரு கந்தப்பிள்ளை நாகலிங்கம் ஆரம்பத்தில் விவசாயியாகவும் இழமையில் வாகனச் சாரதியாகவும் பின்னர் சிமெந்துத் தொழிற்சாலையின் தொழிலாளியாகவும் இருந்தவர். சிமேந்துத் தெழிற்சாலையில் படிப்படியாக முன்னேறி Fitter in Charge ஆக உயர்ந்தவர். தந்தை தனது இழமைக் காலத்தில் இருந்து 1976இல் மரணமாகும் வரை லங்கா சமசமாஜக் கட்சியின் தீவிர ஆதரவாளர். அதன் தலைவர் கலாநிதி என் எம் பெரேராவில் மதிப்புக் கொண்ட விசுவாசி.

திரு கெங்காதரன் தனது தந்தையின் அடிச்சுவட்டைப் பின்பற்றி பொதுவாக இடதுசாரிகளையும் குறிப்பாக சமசமாஜக் கட்சியையும் தனது மாணவ பருவத்தில இருந்து ஆதரித்து நின்றார். ஆனால் 1969இல் தோழர் வி பொன்னம்பலத்துடனான தொடர்பு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியோடு இணைய வைத்தது. திரு கெங்காதரனின் தந்தையார் 1947 பொதுத் தேர்தலின் பின் கலாநிதி என் எம் பெரேராவுக்கு பிரதமராகக் கிடைத்த வாய்ப்பை கம்யூனிஸ்ட்களே குழப்பியதாக கருத்துக் கொண்டிருந்தார். அவரின் அதிருப்தியை மீறி கெங்காதரன் தனது அரசியலைத் தீர்மானித்தார் ஆனாலும் சமசமாஜக் கட்சிமேல் எப்பொழுதும் ஒரு சுமுகமான உறவையே கொண்டிருந்தார்.

1970 பொதுத் தேர்தலைத் தொடர்ந்து கம்யூனிஸ்ட் வாலிப முன்னணியில் இணைந்து தீவிர அரசியலில் பங்கேற்றார்.

கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கம், காங்கேசன்துறைத் தொகுதி
செயலாளர் 1971 -1973

கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கம், யாழ்ப்பாண மாவட்டம்
துணைச் செயலாளர் 1971 -1973

தேசிய மாணவர் சங்கம் - யாழ்ப்பாண மாவட்டம்
செயலாளர் 1972-1973

கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்தின் வட பகுதிக்கான மாநாட்டை 1970 இறுதியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் தோழர் வி பொன்னம்பலத்துடனும் தோழர் சிவலிங்கத்துடனும் இணைந்து நடாத்தினார்.

1970 – 75 காலப்பகுதியில் தோழர் வி பொன்னம்பலத்தின் வலது - இடது கைகள் என்று கூறத்தக்கதாக கட்சியினதும் தொகுதி அரசியலினதும் வேலைகளில் தோழர் கெங்காதரனும் தோழர் சிவலிங்கமும் சேர்ந்து பங்குபற்றினர். இவர்கள் இருவரும் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக அரசியலிலும் பொது வேலைகளிலும் இணைந்து வேலை செய்கின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமதர்மவாதி கெங்கா

**நடராஜா சச்சிதானந்தன்**

1978ம் ஆண்டு எனது தந்தையார் இறந்த சமயம் திரு சிறிகெங்காதரன் ஒரு அனுதாபமடலை எனது சகோதரர் ஒருவருக்கு அனுப்பியிருந்தார். அன்றிலிருந்து இவருடன் எனக்குத் தொடர்பு ஏற்பட்டது. 1970ம் ஆண்டுக்குப் பின் ஈழத்திலிருந்து வருகை தந்த பல அரசியல்வாதிகளுக்கு தென்கிழக்கு லண்டன் பகுதியில் பலகூட்டங்களையும் சந்திப்புக்களையும் ஒழுங்கு செய்வது எனது வழக்கம். அவற்றில் குறிப்பிடத்தக்கவை சந்திரிக்கா குமாரதுங்கா அ அமிர்தலிங்கம், மு சிவசிதம்பரம், ஜனார்த்தனன், பழ.நெடுமாறன், பெரியார் தாசன், அரு கோபாலன், கோவை மகேசன், ஈழவேந்தன், செ எசந்திரகாசன் ஆகியோருக்கான கூட்டங்களாகும். இக்கூட்டங்களில் திரு கெங்காதரன் தனது அரசியல் கருத்துக்களை வெளிப்படையாத் தெரிவிக்கப் பின் நிற்கவில்லை. அத்துடன் கெங்காதரன் அவர்களுடைய நண்பன் திரு அருள்தாஸ் அவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒருங்கிணைப்பாளராக செயற்பட்டவர். அவருடைய இல்லத்தில் நடைபெற்ற அரசியல் கலந்துரையாடல்களில் கெங்காதரனைச் சந்திக்கும் வாய்ப்பு அதிகரித்துக் கொண்டு வந்தது. அவருடைய முற்போக்கு அரசியல் கருத்துக்களுக்கும் எனது சிந்தனைகளுக்கும் அதிக வேறுபாடுகள் இருக்காத காரணத்தினால் எமது தொடர்பு நீடித்தது.

80களில் பல தமிழ் அரசியல் அமைப்புக்கள், ஈழத்தமிழர் அரசியல் விமோசனம் கருதி ஆரம்பிக்கப்பட்டன. 1983இல் இலங்கையில் மிகப் பெரிய இனக்கலவரம் ஏற்பட்டது. இதனை ஒட்டி உடனடியாகவே மிகப்பிரமாண்டமான கண்டன ஊர்வலத்தை எல்லோரும் இணைந்து ஒழுங்கு செய்தோம். இதனைத் தொடர்ந்து அக்காலத்தில் இலண்டனில் பல கூட்டங்கள், சந்திப்புக்கள், கண்டனப் பேரணிகள், நடைபெறுவது வழக்கமாகியிருந்தது. அந்த நேரத்தில் பல தமிழ் இயக்கங்கள் இந்நாட்டு முற்போக்கு அமைப்புக்களுடன் இணைந்து ஈழப் பிரச்சார ஒன்றியத்தை (Eelam Solidarity Campaign) உருவாக்கினார்கள். இது காலம் சென்ற கலாநிதி ஆறுமுகம் தலைமையில் உருவாக்கப்பட்டது. அந்த அமைப்பின் செயலாளராக திரு கெங்காதரனும் பொருளாளராக நானும் மற்றவர்களுடன் ஒருங்கிணைந்து செயற்பட்டோம். திரு கெங்காதரன் ஐந்து ஆண்டுகள் அதன் செயலாளராக இருந்து பல ஊர்வலங்களையும் கூட்டங்களையும் ஒழுங்கு செய்திருந்தார். இவற்றில் இந்தநாட்டின் பாராளுமன்ற உறுப்பினர்களும் முற்போக்குச் சக்திகளும் கலந்து கொண்டமையின் பின்னணியில் திரு கெங்காதரனின் பங்கு கணிசமானது. இலண்டனில் இன்றுள்ள தமிழர்கள் அறியாதவைகளில் முக்கியமானவை இலங்கையின் பல்வேறு சிங்கள அரசியல்வாதிகளும் இங்குள்ள சிங்கள மக்களும் கலந்துகொண்டமையே. தமிழ்மக்கள் இவற்றை எல்லாம் துணிவாக செயற்படுத்திய திரு கெங்காதரனை நினைத்துப் பார்க்கவேண்டும். நன்றி பாராட்ட வேண்டும்.

1993ம் ஆண்டில் லூயிசம் பகுதியில் ஒரு சிவன் ஆலயம் ஆரம்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டேன். அந்தநேரத்தில் இப் பகுதியில் உள்ள சமய, சமூக, -கலாச்சார சிந்தனை கொண்டவர்களை இணைத்து ஆலயத்தை ஆரம்பிக்க வேண்டும் என்பது எனது அவா. திரு கணேசமூர்த்தி அவர்கள் திரு கெங்காதரனையும் சேர்த்துக் கொள்ளலாம் என என்னிடம் தெரிவித்தார். திரு கெங்காதரனை எனக்குப் பலவருடங்களாகத் தெரிந்த காரணத்தினால் அவர் சமயத்தில் பெரிய ஈடுபாடு இல்லாதவர் என எண்ணித் தயக்கம் காட்டினேன். ஆனாலும் திரு கெங்காதரன் சமூகத்தின் முன்னேற்றத்தில் மிக்க அக்கறை கொண்டவர் என்ற காரணத்தினால் அவரும் இணைந்த அறங்காவலர்சபை உருவாக்கப்பட்டது. செயற்பட்டது. சிவன் ஆலயத்தின் ஆரம்பத்திற்கும் இருப்பிற்கும் இவருடைய பங்கும் குறிப்பிடத்தக்கது. வருங்காலத்தில் சிவன் கோவிலை பொதுமக்கள் நிர்வகிக்கும் கோவிலாக மாற்றுவதற்கு இவரின் பங்கு உதவியாக இருக்கும் என நம்புகின்றேன்.

திரு கெங்காதரனின் மணிவிழாவை முன்னிட்டு வெளிவரும் மலரில் எனது கருத்துக்களையும் பதிவதுடன் அவருடைய சேவை தமிழர் சமூகத்திற்கு இங்கும் எமது நாட்டிலும் தேவை எனக்கூறி அதைத் தொடர வாழ்த்துகின்றேன்.

கெங்காதரனுடைய சமூகத் தொண்டிற்கு உறுதுணையாக இருக்கும் மனைவி ஜெயகௌரியிற்கும் மகன் ஜனகனிற்கும் நாம் நன்றியுடையவர்களாவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GENGA – Lifelong Communist

***Charles Antonidas***

Srigengatharan, known as Genga is known to me as a communist, led a life of an idealist. His brothers and sisters revered him for his dedication in bringing up his family. For us in 1970s, he was forthright revolutionary and militant in his deeds. He put his ideals before his personal ambitions. He would never miss a meeting. His personal comfort was secondary to political commitments. He stood firm for the right of self-determination because right of self-determination was an issue of the Left. When American President Wilson Woodrow wavered in his commitment to self-determination, it was V.I.Lenin who gave concrete support and clear expression. Without consistent campaign of USSR, Self-determination would not have its place in the UN statute or free the free people from colonial oppression. To understand Genga, one needs to understand the history of Left in Sri Lanka.

During the colonial time, it was Sinhala leaders like SWRD Bandaranayake who wanted to have a free Ceylon that would allow the union of peoples as equals to live in peace and prosper. Then only leading political force, Jaffna Youth League did not support Tamil Nationalism. It is the reactionary nationalism of the Sinhala Ceylon that alienated the Tamil people from main stream. A nation that chooses to oppress other will never be free. Leftist movement hoped for social justice, national peace, self-determination of all peoples and proposed voluntary union of peoples in equal terms would bring the dawn of new Free State.

The compromising leadership among Tamil nationalists was content with ministerial portfolio. It is fair to say that Sinhalese leaders of all spectrum pioneered federal solution since 1920s.

Leading politicians seemed to have pleaded with Tamils and Sinhalese for a federal constitution or parity based on right of self-determination. Even before Colombo based Tamil leaders who were horse-trading with ruling elite for positions, other national leaders found it was necessary to establish a stable government through federal solution.

- 1926, late SWRD Bandaranayake argued strongly for the federal state for SL on his return from Oxford. Six letters to Ceylon Morning Leader was published on the argument for federal idea between 19th of May 1926 and 30th of June 1926 on Federation i.e. federation of nation-states.

- On 17th July 1926, under the auspices of Students' Congress in Jaffna SWRD was invited to talk on "Federation as the only solution to our Political problems" was forthright with clear expression of advocacy for a federal solution in Ceylon. He said that British introduced a system that was unsuitable to a country with large communal difference. Yes, this was 1926.

He evaluated federal models and SWRD declared "It was wrong to think the difference were not fundamental. They thought that the difference would disappear when those persons died. A hundred years ago there was no such differences...when the moment appear to speak of taking government in their hands, then the difference that were lying dormant smoldered forth. If they considered the past history, they would see that they had lived together over a thousand years together and had not shown any tendency to merge.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

They preserved the language, their customs and their religion. He would be rashman who would pin his faith on the gradual disappearance of those differences.

Centralized form of government assumed a homogenous whole. He knew no part in the world where a government was carried under such conflicting circumstances as would be experienced in Ceylon. There would be troubles if a centralized form of govt was introduced into countries with large communal difference.

Federal system can be a loose term. But SWRD did not mince his word. He defined the federal government as each federal unit had complete power over themselves. Yet they united and had one or two assemblies to discuss matters affecting the whole country.

When Tamils challenged him, against federal idea, he retorted –
**"No nation deserved the name of the nation, if it did not want a measure of self-government, it deserved to be wiped out of the surface of the earth".**

There had been other initiatives too. Kandyan Sinhalese also acted independently. But after Kandyan uprisings, British colonial administration was determined to bring the rule under one administration to reduce the Kandyan influence. The infrastructure of Kandyan trade that was connected with the eastern province was gradually redirected through the Colombo. All harbors and trading route of Tamil areas were abandoned and Tamils were driven to rely on the jobs in South for survival. Sinhalese simply misinterpreted as British favoritism for induction of jobs for Tamils and ostensibly failed to see it as economic depravation of Tamil region.

Kandyan Sinhalese presented a proposal for a federal state consisting five regions when Doughnomore visited Ceylon in 1920s and 1930s. Kandyan chiefs suggested in their appearances before the Commission in 1927 for a federal polity consisting of the Tamil areas of the Northern and Eastern Provinces, the Low Country Sinhalese provinces (the Western and the Southern) and the Kandyan Sinhalese provinces.(it was Kandyan Sinhalese who championed federalism but also the merger of north-East provinces since it was divided in 1833) Kandyan National Assembly declared: Our claim is not a communal claim or a claim for a aggrandizement of a few; it's a claim for a nation to live its own life and realize its own destiny...we suggest the creation of federal state as in USA...A federal system...will enable the respective nationals of the several states to prevent further inroads into their territories and to build their nationality.

1930s, Leonard Woolf, member of advisory committee on Imperial question of the Labour party, once he lived in Ceylon including North & South, suggested the adoption of Canton structure based on the Swiss model and compared with Swiss & the larger country of Sri Lanka with the similar social structure. He exemplified federal case by comparing with Switzerland and German, French and Italian people to Sinhalese, Tamils and Muslims. He stated that objection that Ceylon was too small and its sub-divisions are too small does not hold water.

The Communist Party of Ceylon (CP) though renegade their principles later, CP developed proposals for reconstituting the state based on ideals of pluralism, nationhood and respect for diversity. It had its origin in Ceylon Trade Union Federation on the 23rd September 1944.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Executive committee of **Ceylon National Congress** which called an all-parties conference to be convened for formulating demand for the recognition of Independence and a free constitution.

The policy of the federation on constitutional reforms can be summarized as follows:

(i) There are two distinct nations in Ceylon

(ii) These are Sinhalese and Tamils, historically evolved nationalities

(iii) They have their own contiguous territory as their homeland

(iv) They have their own language, economic life, culture and psychological make-up

For these reasons:

(i). Equality and sovereignty of the peoples of Ceylon must be recognized

(ii). Both nationalities have their right to self-determination including the right, if they so desire, to form their own independent separate state

(iii). There should be statutory guarantee for the interspersed minorities living in these territories of these nationalities

(iv). The Indians in Ceylon, if they wish to make Ceylon their permanent home, adopt Ceylon their permanent home and adopt Ceylon citizenship, should be given the rights and privileges as any other community.

Borrowing from the above principle the Communist Party drafted its proposal which found expression in the Second Resolution unanimously adopted at the party's Town Hall rally on the 15th-October-1944.

It is important to remember that recognition of the right to self-determination of the Tamil nationality as equal to that of the Sinhala nationality. The CP defined the identity of the people on the recognition of the existence of two political communities which were equally entitled to nationhood and statehood and the desired structure to reflect this reality.

It is a betrayal of Communist party world over of this trend which alienated the communists permanently and Tamil Nation was not an exception. Finally the communists succumbed to the agenda of Sinhala chauvinist hegemony.

LSSP campaigned for parity for all nationalities. When in 1956, Sinhala-only was introduced, LSSP commented, "one language, two nations. Two languages, one Nation". Sinhala only Act was the end of oneness. It was worsened by anti-Tamil pogroms one after the other. It was sign for permanent divisions. Tamils could no longer depend on Sri Lanka for security. Left no longer have the same moral right to demand justice for Tamils on parity.

The 1977 anti-Tamil pogrom was the watershed for Genga's generation. UNP under the leadership of J.R.Jeyawardena destroyed any chance of peaceful solution to the ethnic national question. The call of Jeyawardena for war and repressive agenda distanced people like Late Com. V.Ponnambalam of Communist Party and launch Senthamilar Iyakkam. Genga was a product of this political evolution. His comrade Sivalingam was part of process. Both of them were part of the ardent campaigners of right of self-determination. They never missed an opportunity to engage, interact and act. I would remember them for their relentlessness support for the oppressed of the oppressed!

Charles Antonidas, A Tamil Representative at Thimbu Talks



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Campaign for Political & Human Rights

## Campaign for the Release of Eelam Political Prisoners (CREPP)
## ஈழ அரசியல் கைதிகளை விடுவிக்கும் பிரச்சார அமைப்பு

**1982ம்** ஆண்டு குட்டிமணி, தங்கதுரை போன்ற போராளிகளுக்கு இலங்கை நீதிமன்றம் மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்பு இலங்கையின் இடதுசாரி இயக்கங்களோடு தொடர்பு கொண்ட அனைவரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

இதனையடுத்து ஈழ விடுதலை அமைப்புக்களைச் சார்ந்தோரும் இலங்கையின் இடதுசாரி கட்சிகளோடு தொடர்பு கொண்டோரும் ஒன்றாகக் கூடினார்கள். மரணதண்டனைக்கு எதிராக பிரச்சாரத்தை முன்னெடுக்கும் வண்ணம் ஒரு பிரச்சார அமைப்பை உருவாக்கினார்கள்.

சிங்கள, தமிழ் மக்கள் பலர் இணைந்து இந்தப் பிரச்சாரத்தை முன்னெடுத்தார்கள். மற்றைய இடதுசாரிகளுடன் இணைந்து திரு கெங்காதரனும் இந்தப் பிரச்சாரத்தில் முன்னணியில் செயற்பட்டார்.

## Tamils Rights Group (TRG)
## தமிழர் உரிமைக் குழு

Treasurer 1982 - 1983

1982ம் ஆண்டு வேல்ஸ் தேசியக் கட்சியின் தலைவர் (Wales National Party)திரு டபிட் விக்லி (Dafydd Wigley MP) அவர்களின் தலைமையில் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டு செயற்படுத்தப் பட்டது.

இந்த அமைப்பின் பொருளாளராக 1982-83ம் வருடங்களில் திரு கெங்காதரன் அவர்கள் செயற்பட்டார்கள். இதுவும் ஒரு அரசியல், மனித உரிமைப் பிரச்சார அமைப்பாகும்.

## Tamil Refugees Action Group (TRAG)
## தமிழ் அகதிகள் நடவடிக்கைக் குழு

இலங்கையில் இடம்பெறும் போரினாலும் அவை தொடர்பான அனர்த்தங்களாலும் பெருமளவான தமிழர்கள் இங்கிலாந்துக்கு வரத் தொடங்கினார்கள். இவர்களை இணைத்து வசதிகளைச் செய்து கொடுக்கவும் அதனை பிரச்சாரத்துக்குப் பயன்படுத்தவுமாக இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது.

இலங்கைத் தமிழர் போராட்ட வரலாற்றில் இயக்கங்களிடையே ஏற்பட்ட முதலாவது ஒற்றுமை நிகழ்வு இதுவாகும். தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (TELO), தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOT) , ஈழ மக்கள் புரட்சிகர அமைப்பு (EPRLF) , ஈழப் பரட்சி அமைப்பு (EROS) , விடுதலைப் புலிகள் (LTTE) என்பனவற்றின் கலைப் பிரிவினர் இணைந்து இந்த அமைப்பை உருவாக்கினார்கள். ஆரம்பத்தில் மிக ஒற்றுமையாகச் செயற்பட்டவர்கள் ஒதுக்கப்பட்டு புலிகள் இதனைக் கைப்பற்றி நடாத்தினர்கள். திரு கெங்காதரன் இதன் ஆரம்பகால செயற்பாடுகளில் முன்னின்று செயற்பட்டார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Eelam Solidrity Campaign (ESC)
## ஈழப் பிரச்சார அமைப்பு

Secretary 1985 – 1989

இநத அமைப்பு 1983 யூலை கலவரங்களைத் தொடர்ந்து இங்கிலாந்தில் வாழும் இலங்கைத் தமிழர்களின் அரசியல் உரிமைகளிற்கான பிரச்சார அமைப்பாகத் தொடங்கப்பட்டது. Campaign for the release of Eelam Political Prisoners(CREPP) என்ற அமைப்பாகச் செயற்பட்டவர்கள் 1983 இறுதியிலிருந்து புதிய அமைப்பாக செயற்படத் தொடங்கினர்.

திரு கெங்காதரன், இந்த அமைப்பு தொடங்கப்பட்டதிலிருந்து 1990இல் தமிழர் பிரச்சனைகளை ஒரு குறிப்பிட்ட சிலர் மட்டுமே நடத்தலாம் என்ற நிலை ஏற்படும்வரை முன்னின்று செயற்பட்டார்.

சிங்கள முற்போக்கு சக்திகளை இந்த அமைப்பின் வேலைத்திட்டங்களிலும் பிரச்சாரங்களிலும் ஈடுபடுத்துவதில் முன்னிறார். இதன் மூலம் இந்த அமைப்பிற்கு இனவாதம் இல்லாத பெயரைக் கொடுப்பதில் வெற்றிகண்டார்.

1985இல் இந்த அமைப்பின் செயலாளராகத் தெரியப்பட்டு 1990இல் அமைப்பு செயலிழக்கும்வரை முன்னணியில் செயற்பட்டார்.

இங்கிலாந்தில் அன்றைய காலகட்டத்தில் தமிழ்மக்களின் சார்பில் நடாத்தப்பட்ட அனைத்து அரசியல் பிரச்சாரங்களும் இந்த அமைப்பினூடாகவே மேற்கொள்ளப்பட்டன. இதன் செயலாளராக சகல நடவடிக்கைகளிலும் முன்னணியில் செயற்பட்டார். பிரச்சாரக் கூட்டங்கள், ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் என்பன இந்த அமைப்பின் முன்னெடுப்பிலேயே நடைபெற்றன.

ஒற்றுமைக்கு எல்லா நேரங்களிலும் உரத்துக் குரல்கொடுத்துச் செயற்பட்டார்.

தமிழ்பேசும் மக்களின் விடுதலைப் போராட்ட இயக்கங்களிடம் தொடர்ந்து ஒற்றுமைக்கு வற்புறுத்தினார்.

ஒற்றுமை என்பது பங்குகொள்ளும் அமைப்புக்களின் தனித்துவமான செயற்பாட்டை உறுதிசெய்யவேண்டும் என்பதில் விட்டுக்கொடுகாமல் செயற்பட்டவர். ஒரு இயக்கம் இன்னொரு இயக்கத்தை அழிப்பதற்கு எதிராக தொடர்ந்து குரல் கொடுத்தார்.

தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தில் அரசியல் படுகொலைகளையும், தனிமனித கொலைகளையும், உட்கட்சிக் கொலைகளையும் தயங்காமல் கண்டித்து உரக்கக் குரல்கொடுத்தவர்.

தமிழ் மக்களின் பிரச்சாரங்களில் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களையும், அரசில்வாதிகளையும் பெருமளவில் பங்குபற்ற வைப்பதில் இவருடைய பங்கு கணிசமானது.

இந்தப் பிரச்சாரங்களில் தமிழ்பேசும் மக்கள் அல்லாதாரை பங்குபற்ற வைப்பதில் ஆரம்பகாலங்களில் முன்னின்று செயற்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Campaign for Democracy & Justice in Sri Lanka (CDJ)
## இலங்கையில் நீதிக்கும் ஜனநாயகத்திற்குமான பிரச்சார அமைப்பு

இலங்கையின் ஜனாதிபதியாக திரு பிரேமதாசா கடமையாற்றிய காலப் பகுதியில் இடம்பெற்ற படுகொலைகள், மனித உரிமை மீறல்கள் என்பவற்றை வெளிச்சமிட்டுக் காட்டுவதற்காக 1991ம் ஆண்டளவில் உருவாக்கப்பட்ட அமைப்பு.

தனது கணவரின் படுகொலைக்குப் பின்பாக தனது பிள்ளைகளுடன் இங்கிலாந்தில் தற்காலிகமாக வசித்த திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா, காலம்சென்ற வெஸ்லி முத்தையா, காலம்சென்ற உபாலி கூரே போன்றோருடன் இணைந்து முற்போக்குச் சிந்தனை கொண்டவர்களால் உருவாக்கப்பட்டு காத்திரமான பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டடது.

1991இல் இன்றைய ஜயாதிபதி திரு மகிந்தா ராஜபக்சாவையும் திரு வாசுதேவ நாணயக்காராவையும் அழைத்து கொன்வே மண்டபத்தில் (Conway Hall) ஏவ்றி பிரபு (Lord Avebury) தலைமையில் பொதுக் கூட்டம் நடாத்தி இலங்கைப் பிரச்சனையை வெளிக் கொண்டுவந்தது.

இந்த அமைப்பிலும் திரு கெங்காதரன் முன்னணியில் செயற்பட்டார்.

## Eelam Tamils Youth Organisation – Jaffna
## ஈழத் தமிழ இளைஞர் இயக்கம் - யாழ்ப்பாணம்

1968ம் ஆண்டு யாழ்டப்பாணப் பாடசாலைகளின் மாணவர்களை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட அமைப்பு. யாழ் - சென்ற பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த மைக்கேல் தம்பிநாயகம் தலைவராகவும், தேசிய இலங்கைமன்னன் செயலாளராகவும் இருந்து செயற்பட்ட அமைப்பு இது.

இதன் ஆரம்பக் கூட்டங்கள் இரண்டிலும் கலந்து கொண்டதுடன் முதல் இரண்டு ஆண்டுகள் அதன் செயற்குழுவிலும் செயற்பட்டார்.

இந்த அமைப்பினால் ஒழுங்குசெய்து நடாத்தப்பட்ட
சியவச லொத்தர் எதிர்ப்பு ஊர்வலத்தையும்
பல்கலைக்கழகம் அமைக்கும் முயற்சிக்கான
ஊர்வலத்தையும் மற்றையவர்களுடன் சேர்ந்து நடாத்தினார்.

இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடர்பு ஏற்பட்டவுடன் கருத்து முரண்பாடுகள் காரணமாக இதிலிருந்து ஒதுங்கினார்.

## Medical Unit for Sri Lankan Tamils (MUST)
## இலங்கைத் தமிழர்களிற்கான மருத்துவ அமைப்பு

1984 -85 காலப் பகுதியில் தமிழநாட்டில் (இந்தியா) வதியும் போராளிகளிற்கும் அகதிகளிற்கும் இயக்க வேறுபாடு இல்லாமல் மருத்துவ உதவிகள் வழங்குவதற்காக உருவாக்கப்பட்டது. TIC, SCOT என்ற நிறுவனங்கள் இணைந்து நடாத்திய இந்த அமைப்பில் முன்னணியில் செயற்பட்டார். இந்தியாவில் இயக்கங்களிடையே ஒற்றுமை ஏற்படுவதற்கான முதற்படி இதன்மூலம் எடுக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலும் கெங்காவும்

## 1960 - மார்ச

### இலங்கை பாராளுமன்ற 4வது பொதுத் தேர்தல்
### காங்கேசன்துறைத் தொகுதி

1960ம் வருடம் மார்ச் மாதம் இலங்கை பாராளுமன்றத்திற்கான 4வது பொதுத் தேர்தல் நடைபெற்றது. தமிழரசுக் கட்சியின் சார்பில் திரு செல்வநாயகம் அவர்களும் சமசமாஜக் கடசியின் சார்பில் திரு வி காராளசிங்கமும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு ஆர் என் சிவப்பிரகாசமும் போட்டியிட்டனர். திரு சிறி கெங்காதரனின் தந்தையார் சமசமாஜக் கடசியின் ஆதரவாளர். அதன் தலைவர் என் எம் பெரேராவில் மிகுந்த மதிப்பும் மரியாதையும் கொண்டவர். எனவே தீவிரமாக சமசமாஜக் கட்சி வேட்பாளர் திரு காராளசிங்கத்தை ஆதரித்து வேலைசெய்தார். ஒன்பது வயதேயான கெங்காதரன் தந்தையாரின் அரசியலை ஒட்டி வேட்பாளர் காராளசிங்கத்துடன் சாவிச் சின்னம் பொறித்த சிவப்புக் கொடியை கையில் ஏந்தியபடி வீட்டைச் சுற்றியுள்ளவர்களிடம் பிரச்சாரத்திற்குச் சென்றார். திரு காராளசிங்கம் 5.000 வாக்குகளுக்கு மேல்பெற்றார். காராளசிங்கத்தை ஆதரித்து அம்பனைச் சந்தியடியில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தை மகாஜனக் கல்லூரி ஆசிரியர் பிரம்மஸ்ரீ சத்தியோசாத ஐயர் தலைமைதாங்கினார். என் எம் பெரேராவை நோக்கி எறியப்பட்ட குண்டினை தடுக்கும் முயற்சியில் கையை இழந்த ரெஜி மெண்டிஎஸ் என்ற தோழரும் உரையாற்றினார்.

இந்தப் பொதுத் தோர்தலில் எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கில் நாடுமுழுவதும் போட்டியிட்ட சமசமாஜக் கட்சியினர் தமது நோக்கில் வெற்றிபெற முடியவில்லை. யூ என் பியின் டட்லி சேனநாயக்கா தலைமையில் அமைந்த அரசு சில மாதங்களில் கவிழ்ந்த காரணத்தால் 1960 யூலை மாதம் மீண்டும் தேர்தல் இடம்பெற்றது.

## 1960 - யூலை

### இலங்கை பாராளுமன்ற இடைத் (பொதுத்) தேர்தல்
### காங்கேசன்துறைத் தொகுதி

இந்தத் தேர்தலில் இடதுசாரிகள் எவரும் காங்கேசன்துறைத் தொகுதியில் போட்டியிடவிலை. தமிழரசுக் கட்சியின் சார்பில் திரு செல்வநாயகமும் தமிழக் காங்கிரஸ் சார்பில் திரு ஆர் என் சிவப்பிரகாசமும் போட்டியிட்டனர். தேர்தலில் திரு செல்வநாயகம் பெரும் வெற்றிபெற்றார்.

இந்தத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அறுதிப் பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைத்தது. படுகொலை செய்யப்பட்ட பிரதமர் SWRD பண்டாரநாயக்காவின் மனைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் புதிய மந்திரிசபை அமைந்ததன் மூலம் உலக சரித்திரத்தில் முதல் பெண்பிரதமரை உருவாக்கிய பெருமையை இலங்கை பெற்றுக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1964இல் திரு என் எம் பெரேரா, சிறி லங்கா சுதந்திரக் கட்சி – சம சமாஜ கட்சியின் கூட்டைத் தொடர்ந்து நிதி அமைச்சரானார். சிறிது காலமே பதவி வகிக்க முடிந்தது. ஆட்சி நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மூலம் கவிழ்க்கப்பட்டது.

## 1965 - மார்ச்

### இலங்கை பாராளுமன்ற 5வது பொதுத் தேர்தல்
### காங்கேசன்துறைத் தொகுதி

1965 மார்ச் மாதம் மீண்டும் பொதுத் தேர்தல் இடம்பெற்றது காங்கேசன் துறைத் தொகுதியில் இம்முறை போட்டி நான்கு முனைகளில் இடம்பெற்றது. தமிழரசுக் கட்சியில் திரு செல்வநாயகமும், தமிழ் காங்கிரசில் மகாஜனாவின் முன்னாள் ஆசிரியர் திரு சிறிபாஸ்கரனும் கம்யூனிஸ்ட் கட்சியில் திரு வைகுந்தவாசனும், புரட்சிகர சமசமாஜ கட்சியில் திரு காராளசிங்கமும் போட்டியிட்டனர். போட்டி தமிழரசு – தமிழ்காங்கிரசாக இருந்த போதிலும் 14வயதான கெங்காதரனும் குடும்பத்தினரும் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளரையே ஆதரித்தனர். உறவினர்களில் பலர், குடும்ப நண்பரான சிறிபாஸ்கரனை ஆதரித்தனர்.

இந்தத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. ஆனாலும் தமிழரசுக் கட்சியின் ஆதரவுடன் டட்லி சேனநாயக்கா பிரதமரானார். தமிழரசுக் கட்சியின் திரு மு திருச்செல்வம் அமைச்சரானார். என் எம் பெரேராவும் கொல்வின் ஆர் டி சில்வாவும் எவ்வளவோ முயன்றும் தமிழரசின் ஆதரவை பெறமுடியவில்லை. பண்டா – செல்வா ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்த இடதுசாரி தலைவர்களால் வாக்குறுதியளிக்கப்பட்டும் தமிழரசுத் தலைவர்கள் இடதுசாரிகளுக்குப் பதில் சிங்கள முதலாளிகளை ஆதரித்து நின்றனர்.

## 1970 - மே

### இலங்கை பாராளுமன்ற 6வது பொதுத் தேர்தல்
### காங்கேசன்துறைத் தொகுதி

இலங்கைப் பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலில் முதன் முறையாக இடதுசாரிகளான சமசமாஜக் கட்சியினரும் கம்யூனிஸ்ட் கட்சியினரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து ஐக்கிய முன்னணியாகப் போட்டியிட்டனர். தமிழ்க் கட்சிகளான தமிழரசு-காங்கிரஸ் கடைசி நேரத்தில் யூஎன்பி அரசிலிருந்து வெளியேறி தனித் தனியே போட்டியிட்டன. யாழ் மாவட்டத்தில் போட்டிகள் மிகப் பலமாகவே இருந்துது. 19வயதான கெங்காதரன் முதற்தடவையாக adultஆக தேர்தல் வேலைகளில் பங்கு கொண்டார். கம்யூனிஸ்ட் கட்சியில் போட்டியிட்ட தோழர் வி பொன்னம்பலத்தை ஆதரித்து முழுமையான பிரச்சாரத்தில் ஈடுபட்டார். இவரைப் போலவே இடதுசாரி அரசியலுக்கு அறிமுகமான திரு சிவலிங்கத்துடன் இணைந்து தாங்களே பிரச்சாரத்தில் ஈடுபட்டதுடன் பொதுவான பிரச்சார ஒழுங்குகளையும் கவனித்துக் கொண்டனர். போட்டி பலமானதாகவே இருந்தது. 8,164 வாக்குகள் பெற்ற விபி இரண்டாவதாக வந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசத்தை மறுதலித்த திரு சுந்தரலிங்கமும் தமிழ்க் காங்கிரஸ் திரு திருநாவுக்கரசும் போட்டியைக் கடுமையாக்கினர். திரு செல்வநாயகம் 13,000 வாக்குகள் பெற்று வெற்றிபெற, எதிர் வேட்பாளர்கள் மூவரும் இணைந்து 17,000 வாக்குகள் பெற்றனர். எல்லாத் தொகுதிகளிலும் இதே நிலைமை. தமிழரசின் தலைவர், செயலாளர், பொருளாளர் இந்தத் தேர்தலில் தோல்வியுற்றது போலவே தமிழ்க் காங்கிரசின் தலைவர், செயலாளர், பொருளாளர் தோல்வியுற்றனர். தமிழர் அரசியலின் அழிவுக்கான ஆரம்பமாக இந்தத் தோல்விகள் விளங்கின. இடதுசாரிகள் முதன்முதலாக ஆட்சியில் பங்குதாரர்களாக இருந்தமையும் தமிழர் கூட்டணியை உருவாக்க துணை நின்ற காரணங்களாகும்.

இடதுசாரித் தலைவர்களான என் எம் பெரேரா, பீற்றர் கெனமன், கொல்வின் ஆர் டி சில்வா, லெஸ்லி குணவர்த்தனா, பி வை துடாவை, பேர்னாட் சொஸ்சா போன்ற தமிழ்மக்களிடம் செல்வாக்குப் பெற்ற தலைவர்கள் அமைச்சர்களாக வலம் வந்தமை இளைஞர்களிடம். அதிலும் தமிழ் இளைஞர்களிடம் உற்சாகத்தை உருவாக்கியது. கம்யூனிஸ்ட் கடசியின்பால் தமிழ் இளைஞர்கள் நூற்றுக்கணக்கில் ஈர்க்கப்பட்டனர். தமிழ் மக்கள் மத்தியில், குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் இதன் விளைவாக கம்யூனிஸ்ட் வாலிபமுன்னணிக் கிளைகள் சகல தொகுதிகளிலும் திறந்து வைக்கப்பட்டன. ஐக்கிய முன்னணி அரசினால் கம்யூனிஸ்ட் கட்சியின் திரு எம் சி சுப்பிறமணியம் சிறுபான்மைத் தமிழர்களின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார். இதுவும் பாதிக்கப்பட்ட, அடக்குமுறைக்கு உள்ளான தமிழர்கள் மத்தியில் புதிய உற்சாகத்தை உருவாக்கியது.

நிதியமைச்சரான கலாநிதி என் எம் பெரேராவின் புதிய பொருளாதாரக் கொள்கையினால் கணிசமான, படித்த தமிழ் இளைஞர்கள் விவசாயத்தில் ஈடுபட்டனர். முதன்முதலாக யாழ்ப்பாண இளைஞர்கள் வன்னியை நோக்கி போகத் தொடங்கினர். இவை தந்த உற்சாகம் ஒரு அரசியல் மாற்றத்திற்கான அறிகுறியைக் காட்டி நின்றது. தேசிய மாணவர் சங்கத்தின் கிளையொன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. இதுபோலவே சமசமாஜக் கடசியிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலும் தமிழ் மக்கள் ஆர்வம்காட்டத் தொடங்கினர் திரு கெங்காதரனும் திரு சிவலிங்கமும் கம்யூனிஸ்ட் வாலிப முன்னணியின் முனனணிப் போராளிகளாகவே வலம் வந்தனர்.

## 1975 - பெப்ரவரி

### இலங்கை பாராளுமன்றம்

### காங்கேசன்துறைத் தொகுதி இடைத் தேர்தல்

ஐக்கிய முன்னணி அரசாங்கம் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியபடி இலங்கையை ஒரு குடியரசு நாடாக, அந்நிய ஆசியல் ஆதிக்கத்தில் இருந்து முற்றாக விடுவிக்கும் முயற்சியில் ஈடுபட்டது. இதன் விளைவாக 1972 மே மாதம் இலங்கையில் புதிய குடியரசு அரசியல் யாப்பு அறிமுகப்படுத்தப்பட்டு குடியரசாக மாற்றப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கோரிக்கை இலங்கையின் இடதுசாரிகளின் நீண்ட நாள் கோரிக்கை. கனவு. ஆனால் தமிழரசுக் கடசியினர் இதனை மிகத் தீவிரமாக எதிர்த்தனர். திரு செல்வநாயகம் அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்து தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜிநாமா செய்தார். இடைத்தேர்தலை வைக்காது இழுத்தடித்த அரசாங்கம் இறுதியில் 1975 பெப்ரவரி 6ம் திகதி இடைத்தேர்தலை நடாத்தியது. வாக்களிக்கத் தகுதிபெற்ற கெங்காதரன் இரவு பகலாக தேர்தல் வேலை செய்தார்.

திரு செல்வநாயகம் தமிழர்களின் பொதுவேட்பாளராக தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாகப் போட்டியிட்டார். இவரை எதிர்த்து அரசாங்கத்தின் சார்பில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வி பொன்னம்பலம் போட்டியிட்டார். இளைஞர்களின் வன்முறைகள் தேர்தலில் தலைகாட்டத் தொடங்கிய காலம். திரு செல்வநாயகம் 25927 வாக்குகளையும் திரு வி பொன்னம்பலம் 9457 வாக்குகளையும் பெற்றனர். சுமார் 10,000 தமிழ்மக்கள் காங்கேசன்துறைத் தொகுதியில் வன்முறைகளுக்கும் நெருக்கடிகளுக்கும் முகம்கொடுத்து மாற்று அரசியல் சிந்தனையை ஆதரித்து நின்றமையை சகலரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுஅமைப்புக்களும் கெங்காவும்

## 1961

### அம்பனை ஞானவைரவர் ஆலயம்
### Ampanai – Gnana Bairavar Temple

மகாஜனக் கல்லூரியின் அருகில் அமைந்துள்ள இந்த ஆலயத்தில் நீண்டகாலம் மிருகபலி இடம்பெற்று நிறுத்தப்பட்டது. பின்னர் இளைஞர்கள் இணைந்து ஞான வைரவர் ஆலயம் எனப்பெயரிட்டு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பூசை வழிபாடுகள் கிராமத்திலுள்ள ஒவ்வொருவரின் உபயமாக நடாத்தப்பட்டது. இளையவர்கள் பங்குபற்றுகின்ற கூட்டுப்பிரார்த்தனையும் தொடர்ந்து நடாத்தப்பட்டது.

கலைப்பெருமன்றத்தின் முன்னெடுப்பில் திருக்கார்த்திகையன்று தீபத்திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்தது.

பின்னர் திருவெம்பாவை பத்து நாளும் அதிகாலை 5மணிக்கு அபிஷேக ஆராதனைகளுடன் சமயச் சொற்பொழிவுகளுடனும் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இவைகள் போர்க்காலச் சூழலினால் குழம்பும் வரை தொடர்ந்து சிறப்பாக நடைபெற்று வந்தது.

## 1967

### மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம்
### Maviddapuram Kanthaswamy Temple

தெல்லிப்பழைக் கிராமத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள சரித்திரப் பிரசித்தி பெற்ற ஆலயம் இதுவாகும். ஆனி – ஆடி மாதங்களில் இதனது வருடாந்த உற்சவங்கள் சிறப்பாக நடைபெறுவது வழமை. தெல்லிப்பழை கிழக்கு கிராம சேவகர் தலைமையில் ஒழுங்கு செய்யப்படும் ஒலிபெருக்கி சேவையையும் பாடசாலைகளின் சாரண அணியினரைக் கொண்டு நடைபெறும் வீதி ஒழுங்குப் பராமரிபுச் சேவையையும் பொறுப்பெடுத்து நடாத்தினார்..

இந்தக் காலப்பகுதியில் தேர்த்திருவிழாவின் இரவு – ஆடி அமாவாசைக்கு முன்னிரவு – கீரிமலைக் கடற்கரையில் தெல்லிப்பழைக் கிராமச்சங்கத்தின் உதவியுடன் நடைபெறும் கலைவிழா ஒழுங்குகளையும் ஒலிபெருக்கி சேவையினையும் பொறுப்பெடுத்து நடாத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1968

### அம்பனை – கலைப்பெரு மன்றம்
### Ampanai – Kalaipperu Mantram

Founder Member 1968
Secretary 1968 – 1970

பின்னாளில் வீரகேசரி – தினக்குரல் பத்திரிகைகளின் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு ஆ சிவநேசச்செல்வன், கவிஞர், ஆசிரியர் ஆறுமுகம், திரு க முத்துலிங்கம், திரு பி நாகரத்தினம், திரு வை குணாளன், திரு வி சிவலிங்கம் போன்ற கலையார்வம் கொண்ட கிராமத்து இளைஞர்களுடன் இணைந்து உருவாக்கியதே கலைப்பெருமன்றமாகும். தனது பதினோராவது வயதில் இந்த அமைப்பின் முதலாவது இணைச்செலாளராகவும் தொடர்ந்து அதனது நிர்வாகசபை உறுப்பினராகவும் செயற்பட்டார்.

சமயத்தையும் இணைத்துச் செயற்பட்டால் மாத்திரமே ஊரவர்களின் ஆதரவையும் ஒத்துளைப்பையும் பெறலாம் என உணர்ந்து அதனையே சங்கத்தின் செயற்திட்டத்தின் ஒரு பகுதியாக உருவாக்கி மன்றத்தை மிகச் சிறப்பாக வளர்க்கத் துணைநின்றார்.

1968 முதல் 1975வரையான காலப் பகுதியில் அம்பனை வைரவர் ஆலயத்தில் கார்த்திகைத் **தீபத்திருவிழாவையும், திருவெம்பாவையையும்** மிகச் சிறப்பாக நடாத்தினார். திருவெம்பாவையின் பத்து நாட்களும் அதிகாலை 5.00 மணி தொடக்கம் பூசை, ஆராதனைகளுடன் சிறப்புச் சமயச் சொற்பொழிவுகளும் இடம்பெற்றன.

1969 – 75 காலப்பகுதியில் தைப்பொங்கல் தினத்தன்று **உழவர்விழா** என கலைப்பெருமன்றம் மிக விமரிசையாகக் கொண்டாடியது. அன்றைய காலகட்டத்தில் இந்த உழவர்விழா பெயர்சொல்லும் கனதியான விழாவாக நடைபெற்றது.

இந்த விழாவில் இடம்பெற்ற கருத்தரங்குகளில் ஈழத்தின் சிறந்த அறிஞர்களான, திரு க கைலாசபதி, திரு சு வித்தியானந்தன், திரு கா சிவத்தம்பி, திரு வி பொன்னம்பலம், திரு அ அமிர்தலிங்கம், திரு மு கார்த்திகேயன் ஆசிரியர் போன்றோர் கலந்துகொண்டனர்.

கவியரங்ககளிலும் வருடந்தோறும் நாட்டின் சிறந்த கலைஞர்கள் கலந்து கொண்டதுடன் 69இல் முதலாவது கவியரங்கத்தை கவிஞர் மகாகவியே தலைமைதாங்கி நடாத்தினார்.

ஆண்டுதோறும் தெல்லிப்பழையையும் அதன் சுற்றுக் கிராமங்களையும் சேர்ந்த அறிஞர்களும் கலைஞர்களும் கௌரவிக்கப் பெற்றார்கள்.

ஆண்டுதோறும் பெறுமதிமிக்க இலக்கிய மலர்கள் வெளியிடப்பட்டன. மகாகவி நினைவாகவும், மறுமலர்ச்சி மலராகவும் வெளிவந்தவைகள் மிகக் கனதியானவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றம் நாடகக்குழு ஒன்றினை உருவாக்கி பல நல்ல நாடகங்களைத் தயாரித்து குடாநாடு முழுவதும் மேடையேற்றியது. மன்ற் நாடகங்கள் பத்துத் தடவைகளுக்கு மேலாக முதற்பரிசை வென்று தங்கப் பதக்கங்களை பெற்றன.

## 1968

### அம்பனை - சூட்டிங் ஸ்ரார் விளையாட்டுச் கழகம்
### Ampanai – Shooting Stars Sports Club

Founder Member 1968
Secretary 1968 - 1975

மகாஜனக் கல்லூரியில் மாணவனாக இருந்த வேளையில் அன்றைய அதிபர் திரு ஜயரத்தினம் அவர்களுடனும் உதைபந்தாட்டப் பயிற்சியாளர் திரு ரி பி பத்மநாதனுடனும் ஏற்பட்ட பிரச்சினை ஒன்றினை அடுத்து உருவாக்கப்பட்டது.

பாடசாலை நேரம் முடிவடைந்த பின்பாக நண்பர்களுடன் இணைந்து கல்லூரித் தேனீச்சாலையில் **சூட்டிங் ஸ்ரார்** விளையாட்டுக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

கல்லூரிக்கு அருகில் மைதானம் அமைத்து பாட்மிற்றன், கரப்பாந்தாட்டம் என்பன சிறப்பாக நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டன.

1969இல் இருந்து 1975வரை யாழ் மாவட்டத்தின் சிறந்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி நடாத்தப்பட்டது.

1971 இல் **மின்னொளி** உதைபந்தாட்டம் மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடாத்தப்பட்டது. மிக வெற்றிகரமான இப்போட்டியே கொழும்புக்கு வெளியே நடாத்தப்பட்ட **முதலாவது மின்னொளி** உதைபந்தாட்டமாகும். அத்துடன் யாழ்ப்பாணத்தின் பிரபலமான கல்லூரிகளின் பழைய மாணவர் குழுக்கள் உருவாக்கப்பட்டு இப்போட்டியில் பங்குபற்றின.

1972இல் மீண்டும் **மின்னொளியில்** உதைபந்தாட்டம் இரண்டு தினங்கள் வெற்றிகரமாக நடாத்தப்பட்டன.

1969, 70ம் ஆண்டுகளில் அங்கத்தவர்களை இணைத்து கிராமத்தில் மூன்று சிரமதானங்களைச் சிறப்பாக நடாத்தினார்.

1 அம்பனை ஞானவைரவர் ஆலய மைதானம் துப்பரவாக்கினர்.

2 கொலங்கலட்டியில் நீலாவத்தை ஒழுங்கை மண்நிரப்பிச் சிரமதானம் மூலம் புனரமைக்கப்பட்டது

3 பன்னாலையில் அளவெட்டி – பன்னாலை ஒழுங்கை மண்நிரப்பி சிரமதானம் மூலம் புனரமைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1971

### அம்பனை சூட்டிங் ஸ்ரார் விளையாட்டுச் கழகம் -கொழும்பு
### Ampanai Shooting Stars Sports Club – Colombo Branch

சூட்டிங் ஸ்ரார் விளையாட்டுக் கழக நண்பர்கள் பலர் கொழும்பு பல்கலைக கழகத்திற்கும் வேறு உயர் கல்விக்கும் தொழில் முறையிலும் கொழுப்புக்குத் தங்கள் இருக்கையை மாற்றிய வேளையில் கொழும்பில் உருவாக்கப்பட்டது. கிரிகெட் வியைாடுவதையும் தெல்லிப்பழைச் சங்கத்திற்கு உதவுவதையும் கருத்தில் கொண்டு மூன்று ஆண்டுகள் வரை இந்த அமைப்பு செயற்பட்டது.

## 1971

### மகாஜனக் கல்லூரி உதைபந்தாட்ட இரசிகர்கள் சங்கம்
### Mahajana College Football Fans Club

| | |
|---|---|
| Organiser | 1971 |
| Editor - Mahajana Soccer Special | 1971 |

1971இல் மகாஜளக் கல்லூரி உதைபந்தாட்டத்தில் சாதனையின் உச்சத்தில் இருந்தது. 1970இல் யாழ்ப்பாண மாவட்டச் சாம்பியன்களாக தொடர்ந்து 4வது முறையாக வெற்றி பெற்றவர்கள் 1971 யூன் மாதம் இடம்பெற்ற அகில இலங்கைப் போட்டியில் வெற்றி பெற்று தேசியசாம்பியன்களாகினர். இதனை உரிய முறையில் கொண்டாட உருவாக்கப்பட்டதே மகாஜனக் கல்லூரி இரசிகர்கள் சங்கம். 1971 நவம்பரில் யாழ் மாவட்டத்தில் தொடர்ந்து 5வது முறையாக இறுதிப் போட்டியில் வியாயாடுவதை ஒட்டி மகாஜன உதைபந்தாட்ட மலர் ஒன்று வெளியிடப்பட்டது.

பாடசாலை ஒன்றின் பெயரில் வெளியிடப்பட்ட **ஒரே உதைபந்தாட்ட மலர்** இதுவாகும். 1945ம் ஆண்டு மகாஜனாவில் உதைபந்தாட்டம் ஆரம்பிக்கப்பட்டது முதல் 1971 அகில இலங்கைச் சாம்பியன்களாகியது வரையான தகவல்கள், படங்கள் கொண்டதான ஒரு முழுமையான மலர் இதுவாகும். இன்றும்கூட மிகத்தரமானதாக இந்தமலர் விளங்குகின்றது.

## 1972

### மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - தெல்லிப்பழை
### Mahajana College Old Students Association – Tellippalai

| | |
|---|---|
| Committee Member | 1972 - 1975 |

தெல்லிப்பழையில் கல்லூரியைத் தளமாகக் கொண்ட பழைய மாணவர் சங்கத்தின் நிர்வாகத்தில் 1972முதல் 1975இல் இங்கிலாந்திற்கு இடம்பெயரும்வரை செயற்பட்டார். சங்கம் கல்லூரி அபிவிருத்தி சம்பந்தமாக எடுத்த அனைத்து நடவடிக்கைகளிலும் முன்னின்று செயற்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டகால அதிபரான திரு ஐயரத்தினம் அவர்களின் திடீர் ஓய்வினால் நிலைகுலைந்து நின்ற மகாஜன சமூகத்தை தனது அரசியல் செல்வாக்கின் மூலம் துணைஅதிபரே புதிய அதிபராகச் செயற்படுவதற்கு உதவினார்.

மிகப் பாரிய அரிசித் தட்டுப்பாடு நிலவிய வேளையில் வருடா வருடம் ஏப்பிரல் மாதத்தில் நடைபெறும் பழைய மாணவர் விழாவின் போது மதிய போசனமாக சாதம் வழங்குவதை நிறுத்த மேற்கொண்ட முயற்சிகளை முன்னாள் அதிபர் திரு ஐயரத்தினத்துடன் இணைந்து முறியடித்ததுடன் தொடர்ந்தும் மதிய போசனமாக சாதமே வழங்குவதை உறுதிசெய்தார்.

## 1972

### தெல்லிப்பழை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம்
### Tellippalai East Rural Development Society

Treasurer 1972 - 73

நீண்டகாலமாகச் செயற்பட்டு இடைநடுவில் தொய்நதுபோய் நின்ற தெல்லிப்பழை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தை TROஇன் பொறுப்பாளராவும் இளைஞர் பேரவையின் செயலாளராகவும் செயற்பட்ட நண்பன் சொக்கநாதர் யோகநாதனுடன் இணைந்து புனரமைத்ததுடன் அதன் பொருளாளராகவும் 1972 – 73இல் செயற்பட்டார்.

## 1972

### காங்கேசன்துறைத் தொகுதி அபிவிருத்திச் சங்கம்
### Kankesanthurai Electorate Development Society

Secretary 1972 – 74

70களில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகித்த காலகட்டத்தில் காங்கேசன்துறைத் தொகுதியின் அபிவிருத்தியைக் கவனத்தில் கொண்டு உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பின் செயவாளராகக. கடமையாற்றினார்

கொம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரான தோழர் வி பொன்னம்பலத்தின் தலைமையில் தொகுதிக்கு உட்பட்ட

தெல்லிப்பழைக் கிராமசபை
மல்லாகம் கிராம சபை
பண்டத்தரிப்பு கிராமசபை
மயிலிட்டி கிராமசபை
காங்கேசன்துறை நகரசபை

ஆகியவற்றின் தலைவர்களுடன் இணைந்து தொகுதி முன்னேற்றத்திற்கான அலுவல்களை முன்னெடுத்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1972

### காங்கேசன்துறைத் தொகுதி வீடமைப்புச் சங்கம்
### Kankesanthurai Electorate Housing Society

Secretary 1972 - 74

70களில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகித்த காலகட்டத்தில் தோழர் பீட்டர் கெனமன் அவர்கள் வீடமைப்பு அமைச்சராக செயற்பட்டார். காங்கேசன்துறைத் தொகுதியின் அபிவிருத்தியையும் தொகுதி மக்களின் வீடமைப்புத் தேவைகளையும் கவனத்தில் கொண்டு உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பின் செயலாளராக கடமையாற்றினார்.

அரசிடம் குறைந்த வட்டிக்குக் கடன்பெற்று வீடுகள் கட்டுவதற்கும் பலாலி போன்ற பகுதிகளில் அரச குடியிருப்புக்களை உருவாக்குவதற்கும் சங்கம் முன்னுருமை கொடுத்துச் செயற்பட்டது.

## 1972

### தெல்லிப்பழை கிராமசபை – பொது நூலகக் குழு
### Tellippalai Village Council – Public Library Committee

Committee Member 1972 – 75

இலங்கையின் மிக முக்கியமான கிராமங்களில் தெல்லிப்பழை குறிப்பிடத்தக்கது. மகாஜனக் கல்லூரி, யூனியன் கல்லூரி என நாட்டின் இரண்டு பெரிய பாடசாலைகள் இருக்கும் ஒரே கிராமம். இப்படியான கிராமத்திற்கு ஒரு நூல்நிலையம் இல்லாமை பெரிய குறைபாடு என உணர்ந்து கிராமசபைத் தலைவர் திரு ம சிதம்பரநாதன் அவர்களை அணுகி ஓரு நூல் நிலையக் குழுவை உருவாக்கினார்.

இதன் காரணமாக கிராமசபைத் தலைவர் தலைமையில் உருவான குழுவின் இளம் உறுப்பினராகச் செயற்பட்டதுடன் ஒரு களியாட்ட விழாவை நடாத்த ஒழுங்குகள் செய்தார்.

1972இல் ஓரு மாத காலம் இடம்பெற்ற களியாட்ட விழாவின் மூலம் ரூபா 25,000 சேர்த்து வைப்பிலிட உதவினார்.

1980இல் நாடுதிரும்பிய வேளையில் அமையப்பெற்ற பொது நூலகம் எதிர்பார்க்கப்பட்ட வகையில் அமையாதது கண்டு மனம் வருந்தியதுடன் சம்பந்தப்பட்டவர்களை அணுகி எதாவது செய்யுமாறு வற்புறுத்தினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1982

### லண்டன் புதுசுகள்
### London Puthusukal

Organiser 1982 – 83

இலங்கையில் மாணவர்களாக இருந்த தம்பியார் சபேசன், பாலசூரியன் , இரவி அருணாசலம், இளவாலை விஜயேந்திரன ஆகியோர் இணைந்து வெளியிட்ட 'புதுசு' சஞ்சிகைக்கு உதவுவதற்காகத் தொடங்கப்பட்டது.

1983ம் ஆண்டு யூலை மாதம் நிதிசேகரிப்பு நிகழ்ச்சி ஒன்றினை நடாத்தினார்.

இந்த நிகழ்சியில், பின்னாளில் இந்திய மத்திய அமைச்சராக விளங்கிய திரு செஞ்சி இராமச்சந்திரன் அவர்களையும் வழக்கறிஞர் திரு இராதாகிருஷ்ணன் அவர்களையும் கலந்து கொள்ள வைத்தார்..

தமிழர்கள் குறைந்த எண்ணிக்கையில் இருந்த காலககட்டத்தில் 'கைலாசபதி அரங்கில்' தரமான கலைவிழா ஒன்றினை நடாத்தினார்.

## 1987

### மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - ஐஇ
### Mahajana College Old Students Association –UK

| | |
|---|---|
| Founder Member | 1987 |
| Asst Secretary | 1987 to 1992 |
| Secretary | 1993 to 2005 |
| President | 2010 – Now |

1977இல் அன்றைய அதிபர் திரு பொ கனகசபாபதி அவர்களின் ஆலோசனையின் பேரில் ஆரம்பிக்க முயன்றும் கைகூடவில்லை.

1987இல் யூலை மாதம் 17ம் திகதி மகாஜனன்களான டாக்டர் நவரத்தினம், திரு இராமநாதன், திருமதி பாமா மகேஸ்வரன், திரு அருள்தாஸ், காலம்சென்ற ஞானசேகரன் ஆகியோரை லண்டன் ஸ்ராண்டிலுள்ள இந்தியா கிளப்பிற்கு அழைத்து மகாஜன பழைய மாணவர் சங்கத்தை ஆரம்பித்தார்.

25 ஒக்டோபர் 1987இல் ஐயரத்தினம் நினைவுதினத்துடன் பழைய மாணவர்சங்கம் பல நூறு பழைய மாணவர்கள் முன்னிலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பழைய மாணவர் சங்கத்தின் ஊடாக சுமார் ஒரு கோடி ரூபாவுக்கு மேலாகக் கல்லூரிக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1992

### தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் - ஐஇ
### Tamil Schools Sports Association –UK

Founder Member 1992
Secretary 1999 to 2005
President 2007

1992ம் ஆண்டு யூன் மாதம் 24ம் திகதி யாழ்பாண மாவட்டத்தைச் சேர்ந்த 12 நண்பர்களுடன் - யாழ் மத்திய கல்லூரியைச் சேர்ந்த திருவாளர்கள் கணேசலிங்கம், பாலராஜா, இராஜசிங்கம், டாக்டர் துரைசிங்கம், யாழ் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த திருவாளர்கள் திருக்கேதீஸ்வரன், இராஜதேவன், ஸ்கந்தவரோதயக் கல்லூரியைச் சேர்ந்த திரு கெங்கேஸ்வரன், காட்லிக் கல்லூரியைச் சேர்ந்த திரு மயில்வாகனம், யூனியன் கல்லூரியைச் சேர்ந்த திரு பத்மநாதன், சென்ற பன்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த திரு போல், கொக்குவில் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த திரு சிறிரஞ்சன் - இணைந்து இந்தச் சங்கத்தைத் தெடங்கினார்.

1992 ஆகஸ்ட் 29ம் திகதி வங்கி விடுமுறை தினத்தின் போது இவர்கள் இணைந்து முதலாவது கிரிக்கெட் விழாவை வெற்றிகரமாக நடாத்தினார்கள்.

இதுவரை 37 விளையாட்டுப் போட்டிகள் வெற்றிகரமாக நடாத்தப்பட்டுள்ளன.

இலங்கையின் தமிழ்ப் பாடசாலைகளுக்கு 50,000 பவுண்ட்களுக்கு மேல் நிதியுதவி செய்யப்பட்டுள்து.

இலங்கையில் தமிழ் மாணவர்களின் விளையாட்டடு வளர்ச்சிக்கு கணிசமான உதவிகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நாட்டில் பிறந்து வளர்ந்த எமது பெண்பிள்ளைகளைக் கொண்டு உருவாக்கிய வலைப்பந்தாட்டக் குழுவை 2001இல் கனடாவிற்கும் 2005இல் இலங்கைக்கும் அழைத்துச் செல்ல காரணமானார்.

முன்னாள் இலங்கை உதைபந்தாட்டக் குழுவின் கப்டன் திரு பிரான்சிஸ் மூலம் ஒரு மாதகால உதைபந்தாட்டப் பயிற்சிகளை யாழ்பாணத்தில் வழங்க உதவினார்.

இலங்கைப் பாடசாலைகளின் பழைய அமைப்பான யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தை(JSSA) நீண்டகால இடைவெளியின் பின்பாக இயங்கச்செய்ய உழைத்தார்.

JSSA மூலம் யாழ்ப்பாணப் பாடசாலை மாணவர்களிடையே வியைாட்டில் அக்கறை கொள்ளச்செய்து திறமைகளை வளர்ப்பதற்கு உதவினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1993

### லண்டன் சிவன் கோவில் - லூயிசம்
### London Sivan Temple - Lewisham

| | |
|---|---|
| Founder Member | 1993 |
| Trustee & Committee Member | 1993-94 |

லுண்டன் - லுயிசம் பகுதியில் வாழ்கின்ற நண்பர்களின் வேண்டுகோளை ஏற்று அவர்களுடன் இணைந்து சிவன் கோவிலை ஆரம்பித்தனர்.

சிவன் கோவிலின் முதலாவது நிர்வாகத்தில் செயற்பட்டதுடன் 19.09.1983இல் இடம்பெற்ற சிவன் கோவில் கால்கோள் விழாவை அனைவருடனும் இணைந்து முன்நின்று நடாத்தினார்.

## 1997

### மகாஜனக் கல்லூரி நூற்றாண்டு நிதியம் - ஐஇ
### Mahajana College Centenary Trust Fund –UK

| | |
|---|---|
| Trustee | Since inauguration |
| Secretary | 2007 - Now |

மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு விழைவினைக் கருத்தில் கொண்டு பழைய மாணவர் சங்கத்தின் செயலாளராக இருந்த வேளையில் ஆரம்பிக்கப்பட்டது.

## 1997

### லண்டன் கலைப்பெரு மன்றம்
### London Kalaipperumantram

தனது ஊரான தெல்லிப்பழையையும் அதன் சுற்றுக் கிராமங்களையும் சேர்ந்த தமிழறிஞர்களையும் கலைஞர்களையும் இங்கு அழைப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டது.

1998இல் தெல்லிப்பழையைச் சேர்ந்த தமிழறிஞர் திரு கதிரிப்பிள்ளை உமாமகேஸ்வரம்பிள்ளை அவர்களை இங்கு அழைத்து கௌரவித்தனர்.

2001ம் ஆண்டு மல்லிகை என்கின்ற மாத சஞ்சிகையை வெளியிடுகின்ற திரு டொமினிக் ஜீவா அவர்களை அழைத்துக் கௌரவித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2004

## SANE

## வடக்கு கிழக்கு விளையாட்டுக் கல்லூரி (இலங்கை)
## Sports Academy for North & East (Sri Lanka)


**வ**டக்கு கிழக்கு விளையாட்டுத் துறையினருடனும் விளையாட்டு அலுவலர் களுடனும் இணைந்து தமிழ்பேசும் மக்களுக்கு ஒரு முழுமையான விளையாட்டுக் கல்லூரியை உருவாக்க முயன்றனர்.

**க**ல்வியில் மாத்திரமே அக்கறை கொண்ட தமிழர் சமூகத்தை புதிய உலகச்சூழலுக்கு ஏற்றவகையில் மனிதவாழ்வோடு சம்பந்தப்பட்ட அனைத்துத் துறைகளிலும் அக்கறை கொள்ளச் செய்வதன் மூலம் வளர்ச்சியை ஊருவாக்கினர்.

**இ**ந்தவகையில் விளையாட்டுத்துறை மிகமுக்கியமானது. இதனைக் கருத்தில் கொண்டு கிளிநொச்சியில் ஒரு முழுமையான விளையாட்டுக் கல்லூரியை உருவாக்க முயன்றனர்.

**வி**ளையாட்டிலும் வேறுதுறைகளிலும் திறமையான பலரை இனங்கண்டு முழுமையான வியைாட்டுக் கல்லூரிக்கான அனைத்து நடவடிக்கைகளையும் பூர்த்தி செய்ததுடன் கிளிநொச்சிக்குப் பலதடவைகள் விஜயம் செய்து திட்டத்தின் வெற்றிக்கான சகல நடவடிக்கைகளையும் எடுத்தனர்.

TSSAமூலம் சேகரிக்கப்பட்ட 50,000 பவுண்ட்கள் செலவுசெய்யப்பட்ட இந்த அருமையான திட்டம் போரினாலும் போர்க்காலச் சூழலினாலும் நடைமுறைப்படுத்த முடியவில்லை.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகலிங்கம் சிறிகெங்காதரன் பெற்ற கௌரவங்கள்

1. **1993** (27 யூன்) பிரான்ஸ் மகாஜன பழைய மாணவர் சங்கம் நடாத்திய ஜயரத்தினம் நினைவு உதைபந்தாட்ட இறுதிப் போட்டியின் சிறப்பு விருந்தினர்
2. **1994** (26 நவம்பர்) கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினால் தேனீர் விருந்து
3. **1997** மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் 10வது ஆண்டுவிழாவில் நீண்ட சேவைக்கான விருது
4. **1998** கனடா பழைய மாணவர் சங்கத்தினால் இரவு விருந்து
5. **2002** தமிழ்ப்பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் 10வது ஆண்டுவிழாவில் நீண்ட சேவைக்கான விருது
6. **2002** (29 ஒக்டோபர்) மகாஜனக் கல்லூரியின் ஜயரத்தினம் நினைவு தினக்கொண்டாட்டங்களின் சிறப்பு விருந்தினர்
7. **2003** கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற யாழ்ப்பாண பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வின் சிறப்பு விருந்தினர்
8. **2003** தமிழீழ அரசியல் துறையினதும் விளையாட்டுத் துறையினதும் சிறப்பு விருந்தினர்களாக TSSAயினருடன் கௌரவிப்பு
9. **2005** (04 யூலை) கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்ற யாழ்ப்பாணப் பாடசாலைகளின் விளையாட்டு வீரர்களிற்கான பரிசளிப்பு விழாவின் சிறப்பு விருந்தினர்
10. **2007** ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த விளையாட்டு விழாவின் முதன்மை விருந்தினர்
11. **2007** எசெக்ஸ் தமிழப் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழாவின் முதன்மை விருந்தினர்
12. **2007** மானிப்பாய் இந்துக் கல்லூரி பழையமாணவர் சங்க வருடாந்த ஒன்றுகூடலின் முதன்மை விருந்தினர்
13. **2008** தமிழப்பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் 2008ம் ஆண்டிற்கான கௌரவ விருதினை வழங்கியது
14. **2009** மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்க 21ம் ஆண்டு விழாவில் நீண்டசேவைக்கான கௌரவம்.
15. **2010** மகாஜன பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையினர் இரவு விருந்தளித்துக் கௌரவித்தனர்
16. **2010** மகாஜன பவுண்டேசன் இரவுவிருந்தளித்துக் கௌரவித்தனர்
17. **2010** **மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவின் இறுதிநாள் நிகழ்வின் முதன்மை விருந்தினர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகலிங்கம் சிறிகெங்காதரன்
# காத்திரமான பதிவுகள்

1. **1968** இல் தனது 17வது வயதில் நண்பர்களுடன் இணைந்து
**விளையாட்டிற்கு** 'சூட்டிங் ஸ்ரார் விளையாட்டுக் கழகம்'
**கலை - இலக்கியத்திற்கு** 'கலைப்பெரு மன்றம்' உருவாக்கி
இரண்டினதும் முதல் செயலாளராகத் தெரியப்பட்டமை
2. யாழ்ப்பாண மாவட்டத்தின் சிறந்த **மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியை** ஆரம்பித்து 6 வருடங்கள் தொடர்ந்து நடாத்தியமை
3. **1971** எழுதி வெளியிட்ட மகாஜன உதைபந்தாட்ட மலர்
4. **1971** இல் நடாத்திய ***மின்னொளி உதைபந்தாட்டம்*** - கொழும்புக்கு வெளியே முதலாவது நிகழ்வு
5. **1972** இல் மீண்டும் இரண்டு தினங்களாக ***மின்னொளி உதைபந்தாட்டம்***
6. **1972** தமிழ் மக்களின் எதிர்ப்பலைக்கும் தமிழ் இளைஞர்களின் ஆரம்ப கால வன்முறைக்கும் முகம்கொடுத்து இலங்கையின் குடியரசு தின விழாவைக் கொண்டாடியமை. **குடியரசு மலர்** வெளியிட்டமை. தமிழில் வெளிவந்த ஒரே மலர்.
7. **1972** இல் **தேசிய மாணவர் சங்கத்தின்** கிளையை யாழ்பாணத்தில் தொடங்கியமை
8. 1975 **காங்கேசன்துறைத் தொகுதி இடைத்தேர்தலில்** அரசு சார்பு வேட்பாளராகப் போட்டியிட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் வி பொன்னம்பலத்தை ஆதரித்து, வன்முறைகளிற்கு முகம்கொடுத்தும் பகிரங்கமாக வேலைசெய்தது
9. 1977 ***மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்*** ஒன்றினை இங்கிலாந்தில் ஆரம்பிக்க முயன்றமை – **தோல்வி**
10. 1977 இல் தமிழர் விடுதலை இயக்கத்தை ஆரம்பிக்க உதவியமை. அன்ரன் பாலசிங்கத்தை இந்த அமைப்பில் சேர்ப்பதற்காக சந்தித்தமை (*திரு பாலசிங்கத்தை சேர்க்க வேண்டாம் என்ற கெங்காதரனின் சிபார்சினை மீறி அமைப்பில் சேர்க்கப்பட்டார்*)
11. 1977, 1983 இனக்கலவரங்களைத் தொடர்ந்து வசதிகள் அற்றிருந்த நிலையிலும், தமிழர்கள் குறைவாக இருந்த நிலையிலும் நண்பர்களுடன் இணைந்து மாபெரும் ***ஊர்வலங்களை*** நடாத்தியமை
12. தமிழ் இயக்கங்களிடையே ***ஒற்றுமையை*** உருவாக்கத் தொடர்ந்து முயற்சித்தமை. ஆதற்கான பல கூட்டங்களைத் தொடர்ந்து நடாத்தியமை.
13. மாட்டின் அனல்ஸ் (**Martin Ennals**) என்ற அமெனெஸ்ற்றி இன்றநாசனலின் முதல் செயலாளர் நாயகம் எடுத்த இயக்கங்கள் இடையேயான ஒற்றுமை முயற்சியில் முன்னின்று செயற்பட்டமை. – **தோல்வி**
14. 1985 – 1990 காலப் பகுதியில் Eelam Solidarity Campaign இன் செயலாளராக இங்கிலாந்தில் இடம்பெற்ற தமிழரின் சகல பிரச்சாரங்களுக்கும் (ஊர்வலங்கள், கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள்) பொறுப்பாக இருந்து முன்னெடுத்தமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. TELO, EPRLF, EROS, LTTE ஆகிய இயக்கங்கள் இணைந்த வேளையில் இந்த நான்கு இயக்கங்களும் சேர்ந்து லண்டனில் நடாத்திய கூட்டத்தை ***தலைமை தாங்கி*** நடாத்தியமை

16. TELO நண்பர்களுடன் இணைந்து ***48மணிநேர தொடர் அரசியல் வகுப்புக்களை*** நடாத்தியமை. இந்த வகுப்புக்களில் திரு அ அமிர்தலிங்கம், திரு உபாலி கூரே, திரு பெ இராஜநாயகம், கலாநிதி ஆறுமுகம், திரு உத்தமன், ரமணி போன்றவர்கள் வகுப்பெடுத்தனர்.

17. 1987இல் நண்பர்களை அழைத்து ***மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தை*** உருவாக்கியது

18. 1992இல் 11 நண்பர்களுடன் இணைந்து ***யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தை*** (JSSA-UK) உருவாக்கியது

19. மகாஜனக் கல்லூரி இடம்பெயர்ந்த வேளையில் மருதனாமடத்தில் அமைத்த ***தற்காலிக கல்லூரிக்கு*** அன்றைய அதிபரின் வேண்டுகோளின் பெயரில் பழைய மாணவர் சங்கத்தினூடாக தேவையான உதவிகள் செய்தமை

20. 1994இல் இலங்கையின் ***ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்திற்குச்*** சென்று திருமதி சந்திரிக்கா குமாரதுங்கா பண்டாரநாயக்காவிற்காகப் பிரச்சாரம் செய்தது. அமைச்சர் அத்தாவுட செனிவிரத்தினாவுடன் இணைந்து மலையகத்தில் பொதுக்கூட்டங்களில் பேசியமை.

21. மகாஜனாவின் நூற்றாண்டுவிழாவைக் கருத்தில்கொண்டு ***நூற்றாண்டு நிதியத்தை*** இங்கிலாந்தில் உருவாக்க முன்நின்று செயற்பட்டமை

22. தமிழப்பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்திலும் **நிரந்தர நிதியத்தை** உருவாக்கியது

23. மகாஜனக் கல்லூரியின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு ***கொழும்பில் ஒரு சர்வதேச மாநாட்டை*** நடாத்தியமை. இதன் பயனாக நூற்றாண்டு விழாவின் போது மகாஜனா புதுப்பொலிவுடன் விழங்குகின்றது.

24. திருமண வெள்ளி விழாவை முன்னிட்டு ***வயற்காற்று*** என்ற தெல்லிப்பழையைப் பற்றிய ஆவணநூலை வெளியிட்டது

25. இலங்கையின் வடக்குக் கிழக்கில் வாழும் தமிழர்களுக்காக ஒரு பூரணத்துவம் வாய்ந்த ***விளையாட்டுக் கல்லூரியை*** அமைப்பதற்கான ஆயத்தங்களை நண்பர்களுடன் இணைந்து முன்னெடுத்தமை

26. ***2010 ஜனாதிபதி தேர்தலில்*** கலந்து கொண்டு, அமைச்சர் திஸ்ஸ விதாரணவுடன் யாழ்ப்பாணத்தில் கூட்டங்களில் உரையாற்றியமை

27. மகாஜனக் கல்லூரியின் நீண்டகாலத் தேவைகளைக் கருத்தில் கொண்டு ***ஒரு நிரந்தர சர்வதேச நிதியத்தை*** இங்கிலாந்துப் பழைய மாணவர் சங்கத்தின் ஊடாக உருவாக்கும் ஆரம்பகட்ட நடவடிக்கைகளை எடுத்தமை

28. 2002இல் கல்லூரியில் ஜயரத்தினம் நினைவுதினத்தினதும் கனிஷ்ட பாடசாலைப் பரிசளிப்பு விழாவிற்கும் ***சிறப்பு விருந்தினராகக்*** கலந்து கொண்டதுடன் 2010இல் நடைபெற்ற கல்லூரி ***நூற்றாண்டு விழாவின் இறுதிநாள் நிகழ்வின் முதன்மை விருந்தினராகக்*** கலந்து கொண்டு சிறப்புப் பெற்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது மனம் நிறைந்த நன்றி

மணிவிழா மலருக்கு கட்டுரைகள் தந்த
கெங்காவின் நண்பர்களுக்கும்

மலருக்குத் தேவையான விளம்பரங்கள், நிதியுதவி செய்த நண்பர்களுக்கும்

இந்த மலரை அச்சுப் பதிவு செய்து இங்கு நேரத்திற்கு கிடைக்க உதவிய தமிழர் தகவல் பதிப்பாசிரியர்
திரு நா சிவானந்தஜோதி அவர்களுக்கும்

விழாவினை ஒழுங்கு செய்வதற்கு எம்முடன் ஒத்துழைத்த நண்பர்களுக்கும் குடும்ப உறவுகளிற்கும்

விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் அனைவருக்கும்

இன்றைய விழாவிற்கு வருகைதந்த விருந்தினர்களுக்கும்

விழாவின் வெற்றிக்கு உதவிய அனைவருக்கும்

நேரிலும் மறைமுகமாகவும் ஒத்துழைப்பும்
ஆதரவும் தந்த அன்பர்களுக்கும்

ஏற்கனவே
திரு சிறிகெங்காதரனை கௌரவித்த

லூயிசம் சிவன் கோவில் நிர்வாகத்தினருக்கும்
ஈஸ்ற்காம் ஸ்ரீமுருகன் ஆலய நிர்வாகத்தினருக்கும்
தமிழ்ப்பாடசாலைகள் விளையாட்டுச் சங்க நண்பர்களுக்கும்
மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்க நண்பர்களுக்கும்
எமது இதயம் நிறைந்த நன்றி

**நாக சிறிகெங்காதரன் மணிவிழாக் குழு**
7 Blackfen Road
Sidcup
Kent DA15 8QD

**manivila_genga@live.co.uk**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் எண்ணிம நூலகம்

## www.noolaham.org

\

தகவல் வளங்களை எண்ணிம (digital) வடிவத்தில் கொண்டுள்ள நூலகங்கள் எண்ணிம நூலகங்கள் ஆகும். **www.noolaham.org** எனும் வலை முகவரியில் இயங்கும் தமிழ் எண்ணிம நூலகம் இணையமூடாக அணுகக்கூடிய ஓர் எண்ணிம நூலகம் ஆகும்.

**நூலக வலைத்தளம்** பகிரப்படும் மிக முக்கிய வலைத்தளங்களில் ஒன்றாகும்.

- தமிழின் மிகப்பெரும் இணைய எண்ணிம நூலகமாகும்.
- இணையத் தொடர்புள்ள அனைவரும் இலவசமாகப் பயன்படுத்தக் கூடியது.
- எதுவித இலாப நோக்கங்களும் இல்லாத கூட்டுமுயற்சி.
- 2005 தைப்பொங்கலன்று தொடங்கப்பட்டது.
- நூலக நிறுவனத்தின் (www.noolahamfoundation.org) ஒரு செயற்றிட்டம்.

◆ தமிழில் சமகால அறிவு

**நூலக வலைத்தளத்தில்** இலங்கைத் தமிழ் எழுத்தாவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

- 1,700க்கும் அதிகமான எழுத்தாளர்களது நூல்விபரங்கள் உள்ளன.
- 1,100 க்கும் அதிகமான பதிப்பாளர்களது நூல்விபரங்கள் உள்ளன.
- நூல்கள், இதழ்கள், பத்திரிகைகள், சிறுபிரசுரங்கள், ஆய்வேடுகள், நினைவு மலர்கள், விழா மலர்கள், ஆய்விதழ்கள், பாடசாலை மலர்கள் உள்ளிட்ட சகலவிதமான எழுத்தாவணங்களும் ஆவணப்படுத்தப் படுகின்றன
- இலங்கைத் தமிழ் அல்லாத வெளியீடுகள் தனியான பகுப்புக்களில் உள்ளடக்கப்படுகின்றன.
- எழுத்தாளர்கள் பெயர் கொண்டும் ஆண்டுரீதியாகவும் வெளியிட்ட பதிப்பாளர் விபரங் கொண்டும் நூல்வகைகள் ரீதியாகவும் ஆவணங்களைத் தேடியடையலாம்
- மாதந்தோறும் 200-300 புதிய மின்னூல்களின் விபரங்கள் பதிவு செய்யப்படுகின்றன.
- எதுவித இலாப நோக்கங்களும் எதுவித சமய, இன, அரசியல், பிரதேசச் சார்பு நிலைகளும் இல்லை.
- தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் தேடவும் உலாவவும் முடியும்.

◆ 2011 ஜனவரி வரை 8,350க்கும் அதிகமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பயன்கள்**

கலைகள், நாட்டார் வழக்காறுகள் உள்ளிட்ட அனைத்தும் ஆவணப்படுத்தப்படுகின்றன.

- அழியும் நிலையிலுள்ள எழுத்தாவணங்கள் அடுத்த தலைமுறைகளுக்கும் கிடைக்கும் வண்ணம் பாதுகாக்கப்படுகின்றன
- ஆய்வாளர்களும் ஆய்வு மாணவர்களும் வினைத்திறனுடன் ஆய்வு முயற்சிகளை மேற்கொள்ள முடிகிறது.
- பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்கள் கல்விசார் வளங்களைப் பெற்றுக் கொள்ள முடிகிறது.
- சமூக முன்னேற்றத்துக்கான செயற்பாட்டாளர்களுக்குத் தேவையான தகவல்களை இலகுவில் திரட்ட முடிகிறது; தேவையான மேலதிக தகவல்களை அடையாளங் காண முடிகிறது.
- ஈழத்து எழுத்தாளர்களும் அவர்தம் படைப்புக்களும் உலகளாவிய அளவில் அறிமுகம் பெறுகின்றனர்.
- கிடைத்தற்கரிய ஆவணங்களை உலகின் எந்த இடத்தில் வாழ்வோரும் எந்நேரமும் பெற்றுப் பயன்பெற முடிகிறது

- எமது வரலாறு, இலக்கியம், மொழி, பண்பாடு, சமயங்கள்,

**புள்ளிவிபரங்கள்**

- நூலக வலைத்தளம் 8,650 க்கும் அதிகமான மின்னூல் விபரப் பக்கங்களைக் கொண்டிருக்கிறது.
- ஒவ்வொரு மாதமும் 200,000 க்கும் அதிகமான தடவைகள் பக்கங்கள் பார்வையிடப்படுகின்றன.
- ஒவ்வொரு நாளும் 450 க்கும் அதிகமான வாசகர்கள் வருகின்றனர்.
- ஒவ்வொரு மாதமும் 9,200 க்கும் அதிகமான வாசகர்கள் வருகின்றனர்.
- இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளிலிருந்தே மிக அதிகளவான வாசகர்கள் வருகை தருகின்றனர்.
- ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், கனடா, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், பிரான்ஸ் போன்ற நாடுகளில் இருந்தும் கணிசமான வாசகர்கள் வருகின்றனர்.
- ஆவணப்படுத்தப்பட்ட சுமார் 8,300 ஈழத்து வெளியீடுகளில்
  - நூல்கள் 3096
  - இதழ்கள் 3160
  - பத்திரிகைகள் 1431
  - ஏனையவை 613
- 1887 முதல் 2010 வரையான காலப்பகுதியில் 97 ஆண்டுகளில் வெளியான ஆவணங்கள் உள்ளன.
- இலங்கைத் தமிழ் அல்லாத வெளியீடுகளைக் கொண்டிருக்கும் அயலகம் பகுதியில் 300 க்கும் அதிகமான ஆவணங்கள் உள்ளன.

**எண்ணிம நூலகங்கள்**

- ஏதாவது ஓரிடத்தில் நிறுவப்படும் நூலகத்தினை அப்பிரதேசத்திலோ அல்லது அந்நாட்டிலோ வாழ்பவர்களால் அந்நூலகம் திறந்திருக்கும் நாட்களில் மட்டுமே பயன்படுத்த முடியும். ஆனால், ஓர் எண்ணிம நூலகத்தை எந்நாட்டிலிருந்தும் எந்நேரமும் பயன்படுத்த முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஓர் எண்ணிம நூலகத்தில் தேவையான தகவல்களை இலகுவாகவும் வேகமாகவும் தேடி உடனடியாகப் பெற்றுக்கொள்ள முடியும்.
- அழிவாபத்தை எதிர்நோக்கும் அரிய வெளியீடுகளைப் பாதுகாத்து அடுத்த தலைமுறைகளுக்கும் விட்டுச்செல்லச் சிறந்த வழி அவற்றை மின்னூல்களாக்கிப் பாதுகாப்பதே ஆகும்.
- ஓரிரு பிரதிகளே எஞ்சியுள்ள ஆவணங்களையும் மிகப்பழைய ஆவணங்களையும் மூலப்பிரதி மேலும் பாதிப்படையாத விதத்தில் அனைவருக்கும் கிடைக்கச் செய்வதற்கான சிறந்த வழி எண்ணிம ஆவணப் படுத்தலாகும்.

**பங்களிப்பது எப்படி?**

- இது ஒரு தன்னார்வக் கூட்டுமுயற்சியாகும். ஆர்வமுள்ள எவரும் பங்குபெறலாம்.
- எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள், இதழாசிரியர்கள் தமது வெளியீடுகளை எண்ணிமமாக்கும் அனுமதியுடன் அனுப்பலாம்.
- நூலக வலைத்தளத்தில் நேரடியாக எழுத்தாவணங்கள் தொடர்பான தகவல்களைச் சரிபார்த்தும் இணைத்தும் தளத்தின் உள்ளடக்கத்தை விரிவாக்கலாம்.
- இணையத்தில் கிடைக்கும் மின்னூல்களுக்கான புதிய விபரப் பக்கங்களைத் தொடங்கலாம்.
- நூலக வலைத்தளத்தை பரவலாக அறிமுகப்படுத்தி அதன் பயன்பாட்டை அனைவருக்கும் கிடைக்கச் செய்யலாம்.
- நூலகத் தளம் தொடர்பான உங்கள் கருத்துக்கள், ஆலோசனைகளைத் தெரியப்படுத்தலாம்.
- நூலக நிறுவனச் செயற்பாடுகளுக்கு நிதியுதவி வழங்கலாம்.

ஒரு சமூகத்தின் முன்னேற்றத்துக்குத் தேவையான அறிவினையும் தகவல்களையும் கிடைக்கச் செய்வதில் நூலகங்களின் பங்கு மிக முக்கியமானது. ஒரு நூலகம் அதன் வாசகர்களுக்குத் தேவையான போதிய தகவல் வளங்களைக் கொண்டிருக்கும்போதே அதிலிருந்து உச்சப் பயனைப் பற முடியும்.

பொருத்தமான விதத்தில் ஆவணப்படுத்தப்படாத பெருமளவு நூல்களும் ஏட்டுச்சுவடிகளும் சிறுவெளியீடுகளும் என்றென்றைக்கும் மீண்டும் பெறமுடியாதவையாக அழிந்து போய்விட்டன. எஞ்சியுள்ள பலவும் அழிவாபத்தை எதிர்நோக்குகின்றன. எண்ணிமமாக்கல் நுட்பம் இத்தகைய அழிவுகளிலிருந்து ஆவணங்களைப் பாதுகாப்பதைச் சாத்தியமாக்குகிறது.

நீங்கள் ஒவ்வொருவரும் மனம் வைத்தால் நூலக முயற்சி மென்மேலும் பயன்மிக்கதாகும். நீங்கள் வழங்கும் ஒவ்வொரு ஆவணமும் ஆலோசனையும் பங்களிப்பும் அவ்வகையில் மிக மிக முக்கியமானது.

**நூலக நிறுவனத்தின் செயற்பாடுகள்**

- தமிழில் சமகால அறிவு மிகப் பெருமளவில் பகிரப்பட்டுள்ள மிக முக்கிய வலைத்தளங்களில் ஒன்றான www.noolaham.orgஇனைச் செயற்படுத்துகிறோம்.
- சமூக மட்டத்தில் எண்ணிம ஆவணப்படுத்தல், தகவல் அறிதிறன், எண்ணிம நூலகங்கள் போன்றவை தொடர்பில் விழிப்புணர்வூட்டும் செயற்றிட்டங்களை முன்னெடுக்கிறோம்.
- எண்ணிமமாக்க முயற்சிகளுக்கும் ஆவணப்படுத்தல் முயற்சிகளுக்கும் நிதியுதவி, ஆலோசனை வழங்குகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தமிழில் வெளிவந்த, தமிழரால் எழுதப்பட்ட, தமிழ்-தமிழர் தொடர்பான வெளியீடுகளில் இணையத்தில் கிடைக்கும் அனைத்தையும் ஓரிடத்தில் தேடியடையக்கூடிய வகையில் பதிவு செய்கிறோம்.

- பாடசாலை மாணவர், பல்கலைக்கழக மாணவர், ஆய்வாளர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், எழுத்தாளர்கள் என அனைவரும் பயனடையும் விதத்திலான ஆவணப்படுத்தல் முயற்சிகளில் ஈடுபடுகின்றோம்.

- மேலதிக தகவல்களுக்கு: www.noolahamfoundation.org


நூலக நிறுவனத்துடனான தொடர்புகளுக்கு:

பத்மநாப ஐயர் (இங்கிலாந்து)- 0044 208 471 5636
சசீவன் (இங்கிலாந்து)- 0044 7407 022 609
கோபி (அவுஸ்திரேலியா)- 0061 430479603
பிரதீபன் (ஐக்கிய அமெரிக்கா)- 001 323 679 4666

மின்னஞ்சல் : noolahamfoundation@gmail.com





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25th Anniversary Photos





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Genga's 50th Birthday Celebration




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Book Release at Colombo Thamil Sangam

## வயற்காற்று - தெல்லிப்பழை பற்றிய ஆவணநூல் வெளியீடு
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Family









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Mahajana Memories



































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Political Marches & Campaigns






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# Political Marches & Campaigns






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Politicians





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
LONDEN MANIVIZHA60 MALER INNER8 PGE...Monday, February 28, 2011. Cyan Magenta Bla

# Friends




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TSSA






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெங்காதரன் உரையாற்றிய நிகழ்வுகளில் சில




அதிபர் கனகசபாபதியின் நூல் வெளியீட்டில



இரத்தினசபாபதி MP க்கு லண்டனில் நடந்த இரவு விருந்தில்



1987இல் லண்டனில் சபேசனின் கவிதை வெளியீட்டில்



பிரான்ஸ் மகாஜன ஆண்டு விழாவில்



லண்டன் மகாஜன நாடகத்தின் போது



யாழ்ப்பாணத்தில் JSSA பரிசளிப்பு விழாவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில சந்திப்புக்கள்





## சில நண்பர்களும் சில மரணங்களும்...?















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RATNA & COMPANY SOLICITORS

Specialises in;

- Immigration and Nationality Law.
- Work Permit applications.
- Highly skilled migrant programme.
- Tourist visa applications and extensions
- Student visa applications and extensions
- Permanent resident applications if you have lived in the UK for 7/10/14 years
- Asylum applications and appeals
- Human Rights applications
- Bail and detention matters
- European citizens applications
- Sponsorship Declarations
- Family Reunion applications
- Houses, Flats and Business buying, selling and re-mortgaging
- Traffic offences
- Cases before Magistrates Court and County Court
- Drafting Will
- Drafting Power of Attorney

We are also able to assess your knowledge in English Language for Nationality applications

**We are authorised by the Legal Services Commission to provide free legal advice**

**Contract: Mr. M or Mrs. K. Ratnapalan** at
169A, High Street North,
East Ham, London E6 1JB

**Telephone: 020 8470 8818**
Fax: 020 8475 0131
Mobile: 07906 862 292(Mr. Ratna), 07769 748409(Mrs. Ratna)
e.mail: k_ratna@ratna.co.uk or mratnapalan@hotmail.com
www.ratna.co.uk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. Pathmanaba Iyer
27-B, High Street,
Plaistow
London E13 0AD



Tooting Diamonds
Mithus Jewellery-யுடன்
இணைக்கப்பட்டுள்ளது

# MITHUS JEWELLERS

322-324 London Road Croydon CRO 2TJ
Tel : 020 8683 1756 Fax : 020 8683 1792

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org